ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவரவர்க ளியற்றிய

# மதுரைவீரசுவாமி கதை.

இஃது

மதுரை

எஸ். அய்யாசாமிபிள்ளை

அவர்களால்

பார்வையிடப்பட்டு

ஐதிகப்படங்களுடன்

மதுரை

புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார்

அவர்களால்,

பிரசுரிக்கப்பட்டது

Printed at the M. M. Press,
MADURA.

விலை] 1913. [அணா 3

உ

சிவமயம்.

# மதுரைவீரசுவாமி கவ.

உலகமிசை மன்னுயிர்க டன்னுயி ரெனக்கருதி ஒரு கவிகை நிழலினின்றே, ஒன்னலர் தமைசெயித் தோங்கு செங்கோலோச்சி யுயர்காசி நகராளுவோன், உளமகிழ்ந் திடமதலை யாயுதித்தாயன்று யொல்கு காட்டில் வைகியே உரகனுலாதரவு பெற்றபின் புன்னுட்டி லுறைமாதிகன் மனையினில், நில்லெனத் தோன்றியவ னுல்வீர னென்று பெயர் நிலையாகவே யடைந்தே, நிருபனும் பொம்மணன் சீமையுற் றவனீன்ற நேரிழை தனைக்கவர்ந்தும். நிறை புகழ் பெறும்விஜய ரங்கனெனு மன்னனது நீள்வாயல் காவல்செய்தும், நிகரில்பலவளமெய்து மதுரையிற் கள் ளர்தமை நெஞ்சங் கலங்கமோதி, வலனுயர்த்தே நல்ல குண பூஷணங்கொடிரு மலைராஜ னிடமேவியே, மங்கைவெள் ளம்மையைக் கண்டன்பு பூண்டவளை மருவிடச்சிறையெடுத்தும், மதிதவழுமாடகச் சிகரகோபு ரமதனில் வளர்சொக்க நாதரருகில், மன்னுமீனுட்சியரு ளினையடந்தேயும்பர் வாழ்த்திமலர் மாரிசொரிய, இலகு மவ்வாலயத் துள்வயங்குங் கனக வெழில் கம்பமதில் மேவியே, இப்புவி நிமித்தியார்த்த மிருசிருட்டிச் சாத்த னேவல்சூன்யத்தி னுடனே, இருமல்காமாலை குன்மங் குட்ட மண்டையிடி யீளைமந்தாரகாசம், இவையெலாந் தீர்த்திடுந்தெய்வமே யென்றுன்வந் திதுதருண மருள் சரணமே.

உ

கணபதி துணை

# மதுரைவீரசுவாமி கதை.

காப்பு

துதியும்வீரமுஞ் சொல்லுநற்கீர்த்தியும்
அதிகவித்தையு மாண்மைபுந்தா னுறும்
மதுரைவீரன்றன் மாகதைவாழ்த்திடக்
கதிர்கொள்சித்தி விநாயகன்காப்பரோ.

பாயிரம்.

வெண் செந்துறை.

சித்திவிநாயகர்தஞ் செய்யபதம்போற்றி
முத்தியளிக்கு முருகர்பதம்போற்றி
சொக்கர்திருவடியைத் தொழுதுமிகப்போற்றி
தக்கதிருமாலின் றுட்டாமறைபோற்றி
அங்கயற்கண்ணம்மை பங்கயப்பதம்போற்றி
மங்கையிலக்குமியின் மலர்ப்பாதந்தான்போற்றி
தெள்ளுதமிழாசான் திருவடியைத்தான்போற்றி
வள்ளிதெய்வானை மலர்ப்பாதந்தான்போற்றி
வாணிதிருவடியை வாழ்த்திமிகப்போற்றி
மாணிக்கவாசகர்தம் மன்னுபதம்போற்றி
செப்பரியசம்பந்தர் செம்பொற்பதம்போற்றி
அப்பர்திருவடியை யன்புடனேதான்போற்றி
சுந்தரமூர்த்தியிரு துங்கப்பதம்போற்றி
சொந்தமிகுந்தசுவ தொண்டரடிபோற்றி
பாண்டிவளநாட்டிற் பானுவைப்போல்விளங்கும்.
ஆண்டவராமெங்களதி வீரன்சரிதைசொல்வோன்

நாட்டுச்சிறப்பு.

மாதமும்மாரி வளங்கும்வளநாடு
காதமணம்வீசுங் கற்பகஞ்சேர்நன்னாடு
கரும்பின்கணுக்கள்முத்தைக் காட்டும்மகாநாடு
விரும்பியறம்வளர்க்கும் மேலானநன்னாடு

முப்போகமும்விளையு மூதோர்வாழ் நன்னாடு
எப்புறமுங்கங்கை யிலங்குந்திருநாடு
நவதானியம்விளையும் நல்லவள நாடு
தலமறையோர்மாமுனிவர் தங்கும்வள நாடு
தாமரைபொய்கைகளுந் தண்மலர்சேர்வாவிகளும்
ஆமையுலாவு மழகானகேணிகளும்
பொன்னுமணிகொழிக்கும் புண்ணியவாறுகளும்
மன்னுந்தரளம் வழங்கியவோடைகளும்
சங்குதவழ்ந்துலவுந் தாழ்வில்லா நஞ்சைகளும்
எங்குமணிவிளையு மெழிலானபுஞ்சைகளும்
பாக்குமரச்சாலைகளும் பன்மலர்ப்பூச்சோலைகளும்
தேக்குமரக்காவுகளுஞ் செங்கரும்புச்சோலைகளும்
சண்பகப்பூநந்தவனம் தானேமிகுந்தவனம்
விண்ணுலவுதோப்புகளும் வீறுகனித்தோப்புகளும்
மல்லிகைப்பூபந்திகளும் மருக்கொழுந்தின்பந்துகளும்
முல்லைமலர்ப்பந்திகளும் முக்கனிமாப்பந்திகளும்
வானத்தளாவிநிற்க வைத்திடுநெற்பொருளும்
தானங்கொடுக்கவைத்த தாழ்வில்லாகளஞ்சியமும்
காமதேனுக்குநிகர் கணக்கில்லாப்பால்பசுவுஞ்
சேமமிகுமாடுகளுந் திரளான மாடுகளும்
பசித்தோரிளைப்பாறப் பாங்கானசத்திரமும்
பொசித்தோர்க்குசம்போகம் பொருந்துஞ்சிலசத்திரமும்
ஆடையில்லார்க்காடை யளித்துவருஞ்சத்திரமும்
வாடைபனிதீர்புழுது வழங்கிவருஞ்சத்திரமும
வேதியற்குவேதம் விளங்குமறச்சாலைகளும்
சாதிக்குச்சாதி தங்குமறச்சாதிகளும்
குயிலோசைமிஞ்சுங் குறைவில்லாமாந்தோப்பும்
மயிலாடிநிற்க வாயத்தபலாத்தோப்பும்
அன்னங்குலாவு மாவிந்தப்பூந்தடமும்
வன்னக்கிளிகள்கொஞ்சும் வளமான நல்லறமும்
இன்னவளமிகுந்த வெழிற்காசிநன்னாடு
தன்னையுரைக்கச்சேடன் றன்னாலுமாகாதே

மலைவளம்.

வாரணிவாசியைச்சூழ் மலைவளத்தைச்சொல்லுகிறேன்
ஆரணமாமுனிவ ரணியணியாய்த்தவமிருப்பார்

காட்டுப்பசுவுங் கடும்புலியுங்கலந்திருக்கும்
நாட்டுப்பசுவோடு நட்பாய்புலியுலாவும்
பருந்துந்தும்பைங்கிளியுமொரு பஞ்சரத்திலேவாழும்
பொருந்தரவின்வாயிலெலி போய்ப்புகுந்துபள்ளிகொள்ளும்
பச்சோந்தியும்மயிலும் பட்சமுடன்வாழ்ந்திருக்கும்
செச்சையும்ஓநாயுஞ் செருக்குடனேகூடிநிற்கும்
சிங்கமும்யானையுஞ் சேர்ந்துவிளையாடிநிற்கும்
பொங்கரவுமந்திகளும் பொருந்தியுறவாயிருக்கும்
இந்தவளமிகுந்த வெழிற்காசிமாமலையைக்
கந்தனதுவாயாலுங் கட்டுரைக்கமிக்கரிதே

## நகரச்சிறப்பு.

காசினியோர்வாழுங் காசியெனுமாநகரம்
தேசமிருந்திலங்குந் தெய்வீகமாநகரம்
செம்பொன்மதில்சூழ்ந்த சிங்காரமாநகரம்
அம்பொன்னால்மாடகூட மமைந்திருக்குமாநகராம்
கோபுரமெங்குங் குலவுந்திருநகராம்
மாபுரமன்னமன்னர் மன்னுந்திருநகரம்
யானைகட்டிவாழுமுடி யரசர்வாழ்வீதிகளும்
சேனைத்தலைவர்பலர் சேர்ந்துவாழ்வீதிகளும்
வேந்தர்க்குக்கோல்கொடுக்கும் வேளாளர்வீதிகளும்
சாந்துசவ்வாதுபன்னீர் தான்விற்போர்வீதிகளும்
சாதகந்தான்குறிக்குஞ் சாஸ்திரிமார்வீதிகளும்
கோலமணிவிளக்குங் குச்சிலியர்வீதிகளும்
வேலைப்பழிக்கும்விழி வேசியர்வாழ்வீதிகளும்
கோடிகுதிரையணி குறித்திருக்குஞ்சாலைகளும்
ஆடிவருங்குதிரை யணியிருக்குஞ்சாலைகளும்
கடையுங்கடைத்தெருவுங் கனமானமாடங்களும்
கோண்டதருஞ்செம்பொற் கொட்டிவைத்தகூடங்களும்
வீதிக்குவீதி விளங்குஞ்சிவாலயமும்
நீதிவழுவாத நெறிமன்னராலயமும்
மன்னர்க்குநன்மதிசொல் மந்திரிமார்மாளிகையும்
அன்னங்கொடையளிக்கும் அழகானமாளிகையும்
எழுநிலைமாடங்களு மெழிலானகூடங்களும்
தாழுமகழிகளுந் தங்கத்தார்கோட்டைகளும்

போர்வீரரெப்புறமும் புடைசூழுங்காவல்களும்
தேர்வீரர்வாள்வீரர் திக்கெட்டுங்காவல்களும்
வாளுறையில்வையாத வலுவீரர்காவல்களுந்
தோள்கொட்டிதட்டிநிற்குந் துடிசூரர்காவல்களும்
கற்பில்வழுவாத கன்னியர்கள்கூட்டங்களும்
அன்பிற்குறையாத அடியார்கள்கூட்டங்களும்
சன்மார்க்கம்நீங்காத சற்குணர்கள்கூட்டங்களும்
துன்மார்க்கமில்லாத துரைமக்கள்கூட்டங்களும்
பந்துமார்மாதர்பலர் பந்தடிக்குமேடைகளும்
இந்துநுதற்பெண்கூடி யிளைப்பாறுமேடைகளும்
கல்விபயிலுங்கனமானசங்கங்களும்
செல்வர்மகிழ்ந்து செவிக்குறுநற்சங்கங்களும்
மூலைக்குமூலை முத்துக்களஞ்சியமும்
சாலைக்குச்சாலை தங்கக்களஞ்சியமும்
வீடுகளெங்கும் விளங்குந்திருமணமும்
நாடுஞ்சிறுவர்கட்கு நல்லதிருமணமும்
மாணிக்கததாலிழைத்த மன்னர்மணிமண்டபமும்
ஆணிப்பொன்னாலமைத்த ஆஸ்தானமண்டபமும்
செண்டுகுயத்தாராடுந் தெய்வத்திருச்சபையும்
வண்டுவிழியாராடு மன்னர்திருச்சபையும்
அன்னமயிலாடு மழகானஇல்லங்களும்
வன்னக்கிளிகள்கொஞ்சும் வாகானஇல்லங்களும்
போர்த்தொழிற்கற்கமன்னர் புரிந்திட்டநல்லிடமும்
எல்லாவளமுமிசைந்திருக்காசிநகர்
வல்லாண்மைமன்னர்பலர் வத்துபணியும்நகர்
இந்ததிருநகரி லென்றும்வரன்முறையாய்த்
தன்னந்தனியே தனிச்செங்கோல்தான்செலுத்தும்
மன்னும்பொறுமையிலே வண்பூமிக்கொப்பானோன்
கன்னல்விளமாரனைப்போற் கட்டழகுதானுடையோன்
சொன்னமொழிதவறுதான் சொல்லிலரிச்சந்திரன்முன்
கன்னன்கொடைமாறக் கனகமளித்திடுவோன்
மன்னியவன்போரில் வள்ளிமணவாளனைப்பான்
சொல்லுமனுநீதியிலே தூயமனுவனையான்
தொல்லுலகையாளும் துளசிமகாராஜன்

மங்காது நீதிநெறி மானிலத்தைபோர்குடைக்கீழ்
செங்கோல்செலுத்தி ஜெயம்பெற்றுவாழ்நாளில்
அரசிருக்கை.

——:*:——

சொல்லமைச்சர்சூழ்ந்துவரத் துளசிமகராஜன்
வல்லமுடிதரித்து மனுசெங்கோல்கைப்பிடித்து
ஆலவட்டஞ்சாமரைக ளணியணியாய்வீசிவர
கோலமுள்ளமாதர் நிறை கும்பமெடுத்துவர
ஆலாத்திதீப மரிவைமார் தாங்கிவர
சிலமறையோர்கள் ஜெயவாழ்த்துகூறிவர
கன்னியர்களாடிவரக் கணிகைமார்பாடிவர
மன்னர்படைநெருங்கமற்றுமுள்ளோர் தானெருங்க
வட்டக்குடைபிடிக்க வாள்வீரர்கைப்பிடிக்க
பட்டுக்கொடிபிடிக்க பலவிருதுதான்பிடிக்க
பற்பலவாத்தியங்கள் பரவைபோற்சத்தமிட
சோற்புலவர் நாற்கவியுஞ் சொல்லிதுதித்துநிற்க
சின்னங்களெல்லாஞ் சிறப்பாய்ப்பிடித்துநிற்க
மன்னிய நாற்சேனை வகைவகையாய்ச்சூழ்ந்துநிற்க
அட்ட சிங்கத்தாங்கு மாஸ்தானமண்டபத்தில்
பட்டமன்னனோடு பண்பாய்க்கொலுவிருந்தான்
மண்டலத்தைத்தான்மதிக்கும் மன்னன்மணிமுடிதான்
கடலெல்லாந்தான்மதிக்குங் காவலன்றன்கணையாழி
வாகுவலயமுந்தான் வானுலகைத்தான்மதிக்கும்
சேகுவயிரமணி ஜெகத்தைவிலைமதிக்கும்
மார்பிற்பதக்கநிறை மதியொளியைமாற்றிவிடும்
சோர்விலொளிபணிகள் சூரியனைத்தோற்கடிக்கும்
இந்தவகைப்பணிக ளிட்டிருக்குமன்னவன்முன்
பந்தமொடுதேசமன்னர் பகுதிகொடுத்துநிற்க
கட்டியர்களெச்சரிக்கை கைகட்டிகூடிநிற்க
நட்டுவர்பின்மாதர்பலர் நாட்டியங்கள் செய்துநிற்க
வெள்ளைத்தடிக்காரர் விதவிதமாய்வந்துநிற்க
துள்ளும்படைவீரர் துடிப்புடனேவந்துநிற்க
சேனைத்தலைவரெல்லாந் திறமுடனேசேர்ந்துநிற்க
யானைத்தலைவரெல்லா மஞ்சலொடுசேர்ந்துநிற்க
தையலர்கள்சங்கீதந் தான்பாடிமுன்புநிற்க



அரசிறத்தல்.

மங்களவாழ்த்து நிறை மங்கிலியர்வாழ்த்திநிற்க
சங்கையில்லாமற்பொன் தானங்கொடுத்துநிற்க
எங்களரசனு ரிருக்குமந்தவேளையிலே
பொங்கமுடனவ்வரசன் புத்திரனில்லாமையினால்
வேதாந்தவேதியரை வேதப்பிராமணரை
ஜாதகரைமற்றுள்ள சாஸ்திரத்தில்வல்லவரை
பார்த்தேயொருவார்த்தை பார்த்திபர்சொல்லலுற்றார்
கீர்த்திபெற்றவிற்பனரே கேள்வியினில்வல்லவரே
அறுபத்துநான்குகலை யாவுமுணர்ந்தவரே
மறுவில்லாவென்குடிக்கு மைந்தனில்லாமையினால்
சிந்தைதளர்ந்து திகில்கொண்டேன்பலநாளும்
எந்தவழியும்பிள்ளை யிசையும்வழிசொல்வீரென்று
பூதலமாளுங்காசிப் பூபாலன்சொன்னவுடன்
வேதப்பிராமணராம் விற்பனர்கள்சொல்லலுற்றார்
அட்டதிக்காளும் அரசர்சிரோமணியே
பட்டந்தனக்குப்பிள்ளை பண்பாகவேண்டுமென்றால்
காசிநதியாடிக் கருதுமுக்காலையிலும்
ஈசன்விசுவேச னெழிலானசன்னதிக்குள்
சென்றுஅபிஷேகமுதல் செய்வித்துப்பின்சிவனை
என்றும்வணங்கியார்க்கு மெண்ணுன்றதர்மஞ்செய்யில்
அவனியொருகுடைக்கீ ழாளமகனபிறப்பான்
சிவனருளாலேயுமக்குச் செல்வன்பிறக்குமென்றார்
சாஸ்திரிமார்கள்சொன்ன சன்மார்க்கச்சொற்கேட்ட
மாத்திரந்தீர்த்தமாட மன்னனெழுந்திருந்தான்

## தீர்த்த மகிமை.

---

கன்மவினைகளெல்லாங் கட்டறுக்குங்காசிநதி
தன்மஞ்செய்வோர்க்குமுத்தி தானளிக்குங்காசிநதி
பிள்ளையில்லார்தான்மூழ்கிற் பிறப்பிக்குங்காசிநதி
அரிக்குமொருபதவி யளித்திட்டகாசிநதி
அந்தவினத்தோடு மளவில்ஜனத்தோடும்
வந்துநற்கங்கைதனில் மணிவிகரம்பிடித்து
சிந்தைமகிழ்ந்துதிவ்ய தீர்த்தத்திலாடியபின்
பல்லாயிரங்கோடி பார்ப்பார்க்குத்தானஞ்செய்ய
இல்லார்பல்லோர்க்குத்தான் ஏகமாய்ச்செய்தபின்பு

காசிவிசுவநாதர் கனகோபுரங்கள்கண்டு
ஆசையுடன்வணங்கி யக்கோயில் நாடிமன்னன்
மன்னர்புடைசூழ மந்திரிமார்தான் தாழ
சன்னிதிவீதியிலே தார்வேந்தன்வந்தபின்பு
அண்டத்தளாவும்பல வானபொற்கோபுரமும்
எண்டிசையுங்காண இலங்குந்திருமதிலுஞ்
சொற்கத்தளாவிநிற்குந் துவசமணித்தம்பங்களும்
கற்களிழைத்திலங்குங் கனமானஸ்தூபிகளும்
எங்குஞ்சிவாலயமு மெழிலான லிங்கங்களும்
தங்கத்தாற்போட்டிருக்குந் தளவரிசைச்சித்திரமும்
மூலைக்குமூலை முத்தால்விளக்குகளும்
சாலைக்குசாலை தங்கவிளக்குகளும்
தேர்விளக்குஞ்சீர்விளக்குந் திருவாட்சிதல்விளக்கும்
பார்விளக்குங்கோபுரத்திற் பதித்தவிளக்குகளும்
சொல்லுநவமணிகள் சொலிக்கும்விளக்குகளும்
இல்லாவிளக்குமிந்த யீரேழுலகிலில்லை
அல்லும்பகலும் அங்கெரியுஞ்சந்நிதியில்
வாழுமறையவர்கள் வரிசையெடுத்துப்பலர்
சூழும்படியாசன் சமுகம்வந்துமேவாழ்த்தி
அந்தமறையோர்க ளரசனைக்கோயிலுள்ளே
சிந்தைமகிழ்ந்துதவஞ்செய்யச்சிவலிங்கமுன்னே
கொண்டுவிடுத்தபின்னர் கொற்றவனுங்கைகுவித்து
தொண்டுபுரிந்துசிவன் துங்கவடிதொழுதான்

## மூர்த்தீ மகிமை.

---

கண்டார்தமக்குமுத்தி களித்தருளுங்காசிலிங்கம்
தொண்டுபுரிந்தோர்க்கு சொர்க்கங்கொடுக்குலிங்கம்
க்ஷேத்திரத்திற்சேர்ந்தோர்க்கு சிவலோகமீயுலிங்கம்
தோத்தரித்தபேர்களுக்கு சூழ்வினை நீக்குலிங்கம்
வேண்டுவரங்களெல்லாம் விரும்பிக்கொடுத்தலிங்கம்
யாண்டும்பிறவாத்தன்மை யார்க்குங்கொடுத்தலிங்கம்
எந்தத்தலத்து மிணையில்லாப்படிகலிங்கம்
இந்தத்தலத்துமேன்மை யெய்துவிசுவலிங்கம்
தன்னைப்பணிந்தரசன் றாழ்ந்து அடிவணங்கி
என்றனக்குப்பிள்ளை ஈய்ந்தருள்செய்யுமென்று

பூசைநைவேத்தியங்கள் புரிவித்து நல்லிசைகள்
ஆசையுடன்பாடி யானந்தக்கூத்தாடிக்
காவலரண்மனைக்குள் காவலனும்போய்ப்புகுந்து
ஆவலுடனே அன்ன மருந்திக்கொலுவிருந்து

அரசன் முப்பத்திரண்டறமுஞ் செய்தல்.

---

மந்திரிமார்களைத்தான் வாகாய்வரவழைத்து
தந்திரிமார்களையே தந்திரமாய்வரவழைத்து
வேதியர்கள்சொன்ன விதிப்படிக்குத்தன்மஞ்செய்ய
நீதிமன்னர்பக்கலிலே நின்றவரைப்பார்த்துரைப்பான்
அடிக்கடிக்குநன்மதிசொல் லமைச்சர்களேகேளுங்கள்
படிக்குள்விளங்குகின்ற பலமானதானமெல்லாம்
என்பெயராலட்டதிக்கு மெழில்பெறவேசெய்வீரென
நன்மதிசேர்மந்திரிமார் நராதிபனுர்சொற்கேட்டு
திக்குக்குத்திக்கு திரளானசத்திரமும்
தொக்கவுலகெங்குஞ் சொல்லரியவாவிகளும்
மண்டலமெங்கும் வகைவகையாய்கோயில்களும்
கண்டங்களொன்பதிலுங் கனத்தமடந்தடமும்
கட்டுவித்தார்காசிநகர் காவலன்றன்சொற்படிக்கு
பட்டத்தரசரெல்லாம் பார்த்துமனமகிழ
கோடிப்பிராமணர்க்கு கொடுத்தான்செம்பொன்கோடி
தேடிப்பலதருமஞ் செய்துவிட்டான்தேர்விஜயன்
கன்னிகாதானங் கணக்கில்வெகுகோடி
அன்னமிடுதான மளவில்பலகோடி
பூதானம்வேதியர்க்குப் போற்றும்பலகோடி
கோதானமந்தணர்க்குக் கொடுத்தான்பலகோடி
நீர்ப்பந்தல்பூமியெங்கும் நிகரில்பலகோடி
மோர்ப்பந்தலம்புவியில் மொழியில்பலகோடி
அறவைப்பிணஞ்சுடுத லதுவும்பலகோடி
பறவைச்சிறைவிடுதல் பாரிற்பலகோடி
கண்ணாடிகாதோலை கண்மருந்துபெண்போகம்
வண்ணானெடுசுண்ண மயிரின்சிறைகளைதல்
விலங்கிற்குணவு விலைகொடுத்தேயுயிர்காத்தல்
துலங்குமகப்பால்கொடுத்தல் சோலைசிறைச்சோறிடுதல்
தின்பண்டம்நல்கல் சேய்வளர்த்தலையமிடல்

வன்கல்வியோர்க்குணவு வாய்த்தபசுவிற்குப்புல்
இந்தவகைத்தரும மிறைவன்கொடுத்தபின்பு
அந்தமுடன்சிவனை யரசன்மனைவியொடும்
சந்ததமுங்காசியில்வாழ் சங்கரனைத்தானோக்கிச்
சிந்தைமகிழ்ந்து செய்தார்பலவிரதம்
அந்தவகையறிந்தே யாதிசிவனன்போடு
சந்தானங்காசிமன்னன் தன்மனைவிக்கேகொடுத்தார்

மதுரைவீரசுவாமி உற்பத்தி.

---

மேகந்தனைப்பழிக்கும் மெல்லியநற்கூந்தலினாள்
தோகைமயிலைப்பழிக்குஞ் சொல்லரியசாயலினாள்
சந்திரனுங்கண்டு தயங்குந்திருமுகத்தாள்
இந்திரருக்கொப்பாக விலங்குமழகுடையாள்
அன்னந்தனைப்பழிக்கு மசைந்ததிருநடையாள்
மின்னலினைப்பழிக்கும் மேகலைப்பூணுடையாள்
பம்பரத்தைத்தான்பழிக்கும் பணைத்தவிளங்குயத்தாள்
செம்பொற்சரிகை சிறக்குமெழிற்கலையாள்
அம்புவிழிமேலே யார்ந்தபுருவச்சிலையாள்
கம்பவாழைத்தொடையால் கற்புமிகுநிலையாள்
துளசிமகாராஜனுக்குச் சொல்லுமுயிர்த்துணையாள்
வள்மிகுந்தகற்பூர வல்லிதிருவயிற்றில்
கங்கையணிசிவனருளால் கருதிரண்டகாலையிலே
மங்கைக்காசி மதிமயக்கமானாள்காண்
மூன்றான திங்களிலே முகம்வெளுத்துக்குயங்கறுத்தாள்
தோன்றுமயக்கமிகத் தோற்றமுறவாடிநின்றாள்
நான்கான திங்களிலே நன்மசக்கைகொண்டாள்காண்
தேன்கதலிமாவருக்கை தித்திப்பிச்சைகொண்டாள்.
ஐந்தான திங்களிலே ஐம்பொன்போல்மேனிகொண்டாள்
சிந்தாகுலமிகுத்துச் சிந்தைமிகத்தளர்ந்தாள்
ஆறான தினங்களிலே யடிவயறுதான்தளர்ந்தாள்
வீறானவேழுதிங்கள் மெல்லியிடைகறுத்தாள்
எட்டான திங்களிலே யெண்ணுமெண்ணிநின்றாள்
ஒன்பதாந்திங்களிலே யுறக்கமிகவிடுத்தாள்
பத்தான திங்களிலே பாலகனைப்பெற்றெடுத்தாள் ·
முத்தானவாய்திறந்து முதல்மகனுந்தானழுதான்

ஆயிரங்கோடி அழகுள்ள சூரியன்போல்
மாயிருஞாலத்தில் வாய்க்காதரெத்தினம்போல்
தங்கத்தைதக்காய்ச்சித் தரையில்கவிழ்த்ததுபோல்
ஒருகோடிசூரியரை யுருக்கிக்கவிழ்த்ததுபோல்
இருகோடிசந்திரரை யெடுத்துக்கவிழ்த்ததுபோல்
கோடிமதனனுருக் கொண்டுதிரண்டதுபோல்
நீடியபூமியிலே திருபன்பிறந்தவுடன்
தேவாதிதேவரெல்லாந் தேன்மாரிதான்பொழிந்தார்
பூவுலகமெல்லாம் பூமாரிதான்பொழிந்தார்
அந்தாதுந்திமிக ளைந்துமுழக்கிவிட்டார்
இந்திரன்வானவர்க ளெல்லாரும்வாழ்த்தலுற்றார்
மண்டலத்திலுள்ளவர்கள் மங்களவாழ்த்துரைத்தார்
விண்டலத்திலுள்ளவர்கள் விதவிதமாய்வாழ்த்திநின்றார்
பாலகனைப்பாரிலுள்ளோர் பலரும்வந்துபார்த்தார்கள்
கொடிசுற்றித்தான்பிறந்த குழந்தைதனைப்பார்த்தார்கள்
துடியிடையோர்தோழிமார் துரிதமுடனோடிவந்து
தொல்லுலகையாண்டுவருந் துளசிமகாராஜன்முன்பு
வல்லகரங்குவித்து வாழியென்றுவாழ்த்தலுற்றார்
எங்கள்குலதெய்வமே யிறையவரே நீர்கேளீர்
மங்காதசெல்வமுள்ள மன்னவரே நீர்கேளீர்
திக்கெல்லாமாளவொரு செல்வனார்தாம்பிறந்தார்
மிக்கவடிவுடைய வேந்தனார்தாம்பிறந்தார்
பிள்ளைகலிதீர்க்கப் பேரரசர்தான்பிறந்தார்
வள்ளலேயிவ்வடிவாய் மானிலத்திற்றான்பிறந்தார்
மாதர்தமைமயக்கும் மன்மதனார்தான்பிறந்தார்
காதல்மிகவளிக்குங் கட்டழகர்தான்பிறந்தார்
பிறந்ததிலேயாதும் பிசகில்லையெம்மரசே
சிறந்தமகன்பிறப்பிற் றீங்கொன்றுண்டெம்மரசே
மாலைசுற்றித்தான்பிறந்தால் மாமனுக்காகாதென்பார்
சாலப்பெருங்குற்றந் தாரணியோர்சொல்வார்கள்
கொடிசுற்றித்தான்பிறந்தால் குலத்துக்காகாதென்பார்
என்றந்தத்தாதியர்க ளேந்தலுக்குச்சொன்னவுடன்
குன்றனையத்தோள்நிமிர்த்து கொற்றவனார்தான்மகிழ்ந்தார்
பிள்ளைபிறந்ததென்று பேரரசர்தான்களித்தார்
கொள்ளைகொடுத்தார் குறைவில்களஞ்சியங்கள்

சீனுச்சர்க்கரையை திக்கெட்டும்வழங்கிவிட்டார்
மானிலத்தில்பின்னே மனமகிழ்வாய்ப்பிரித்துவிட்டார்
அந்தப்புரத்தி லரசரெழுந்தருளி
சந்தமுள்ளதாதியரைத் தானழைத்துத்தன்மகனை
எடுத்துவாவே யிறைவர்வாக்களித்தார்
அடுத்திருந்ததாதியர்க ளப்பொழுதேகொண்டுவந்து
மன்னவர்முன்பாக வைத்தார்பூந்தொட்டிலுள்ளே
சின்னக்குழந்தை திருமுகத்தைத்தான்பார்த்து
என்றுமடையாத வெக்களிப்புத்தானடைந்து
நின்றுமகிழ்ந்து நெடுநேரந்தான்பார்த்து
கொண்டுபோவென்றுசொல்லி கொலுவிலரசன்வந்து
மண்டலத்தையாளும்வல்ல மந்திரியைத்தானழைத்து
சோதிடத்தில்வல்லவரை சுருக்கிலழையுமென்றார்
ஆசியுரைத்துமஞ்ச ளட்சதைவேந்தர்க்களித்தார்
மன்னன்மணியாசனத்தை மறையோர்க்குத்தான்கொடுத்தார்
என்னையழைத்தவித மென்னென்றார்சோதிடரும்
அந்தமொழிகேட்டே யரசன்விளம்பலுற்றான்
வெள்ளிக்கிழமைதன்னில் விடிந்துபத்துநாளிகையில்
வள்ளல்கழித்திலே மாலைசுற்றித்தான்பிறந்தான்
திதிகரணவாரஞ் சிறந்தயோகமிவைநாள்
ததியறிந்துபஞ்சாங்க சாஸ்திரத்தைப்பாருமென்றார்
அப்படியேசோதிடநூ லந்தணர்தான்பார்த்து
செப்பருநாளுதிங்கள் திதிவாரந்திங்கெனவே
சோதித்தறிந்தபின்பு துளசிமகராஜன்
பேதிக்கச்சோதிடரும் பேசத்தொடங்கலுற்றார்
திக்கெட்டுங்கீர்த்தி செலுத்தும்செங்கோல்வேந்தே
தக்கதவம்புரிந்து தான்பெற்றபிள்ளையது
ஜனனமெடுத்ததினந் தாரணிக்கேயாகாது
கன்மானபொல்லாங்கு காசிநகர்க்கெய்திவிடும்
தாளுங்கோளும்பிறந்த நாட்டுக்கேயாகாது
மீளும்பெரும்போரு மிகச்சிறியபிள்ளையினால்
குழந்தையைவைத்திருந்தால் கோத்திரத்திற்காகாது
இழந்திடுவீர்நாடுநக ரிக்குழந்தைதனாலே
அருமகனைவைத்திருந்தா லாண்மனைகள்வெந்துவிடும்
திருமகனைவைத்திருந்தால் தேசமெல்லாம்வெந்துவிடும்

என்றுமிகவுரைத்தா ரெழிலானசோதிடரும்
சூல்றிவயிறெரிந்து கோபமிகக்கொண்டரசன்
அந்தமொழிகேட்டே யடித்தலறிர்தான்விழுந்தார்
சிந்தைதளர்ந்து தியங்கிமதிமயங்கி
அப்பாமகனேயென் றபயமிட்டுந்தான்புலம்பி
எப்படியென்செய்வே னினிபிழைக்கேனென் றுசொல்லி
துங்கவுலகாளுந் துளசிமகாராசர்
அங்கம்வியர்த்தே யவனிதனிற்புரண்டு
வாயிலேமண்ணை வாரியடித்தார்காண்
கோயிலிற்றெய்வமெல்லாங்குறித்துமிகவைதார்காண்
பேச்சுமூச்சில்லாமற் பிணம்போலுமானார்காண்
பூச்சக்கிரமாளும் புகழ்காசிமன்னவனார்
மந்திரிமார்களெல்லா மனதுமிகக்கலங்கி
அந்தவரசனருகிற் சென்றேயெழுந்து
சுக்குப்பொடிகாதிற் சொறிந்துவாயாலூதி
திக்காளும்மன்னவரைத் தெளிந்துவிடச்செய்தார்கள்
சோகமதுதீர்ந்துதுளசிமகாராஜர்
தாகந்தெளிந்துமவர் தனியேயெழுந்திருந்து
கோடிதருமஞ்செய்துங் கொடும்பாவியானேனென்றார்
நாடித்தவம்புரிந்து நான்பாவியானேனென்றார்
முற்பிறப்பிற்செய்தவினை மூண்டதென்றாரிப்பிறப்பில்
நற்பிள்ளைதன்னையினி நான்செய்வதென்னவென்றார்
வந்திருந்தசோதிடர்கள் மன்னவரைத்தான்பார்த்து
இந்தமகனையினி யிங்குவைக்கலாகாது
எவ்விதமும்பிறருக் கீதலேஉத்தமமாம்
அவ்விதமன்றிக்காட் டகத்தில்விடல்மத்திபமாம்
என்றமுறையை யெடுத்துரைத்தாரப்போது
குன்றனையதோள்வேந்தர் கோவென்றழுதுவிம்மி
ஐயையோதெய்வமே யகடமொழிகேட்டேன்
உய்யும்வகையறியே னேகோகோவென்னசெய்வேன்
இறந்தபிள்ளையைக்கொடுக்க எவற்குமனந்துணியாதே
பிறந்தபிள்ளையைக்கொடுக்கப் பேருலகிற்றுணிவாரோ
உயிரோடுபிள்ளைதனை யோட்டிவிடவெண்ணுவரோ
ஆனாலும்பாவியென்போ லம்புவியிற்கண்டிலனே
தேனாரிதழிமுடிச் சிவனார்செயலிதுவோ

வேந்தன்விதித்த விதியின்பயனிதுவோ
ஏதுமறியேனென் றேயிறைவன்மனந்துணிந்தான்

*மதுரைவீரனை வனத்தில் விடச்சொன்னது.*

தூதரைவிட்டரசர் தோழிகளைவரவழைத்து
மாதுகற்பூரவல்லி மைந்தனைப்பொற்றட்டில்வைத்து
மேதினியோர்காணாமல் மிகவிருண்டகாட்டினுள்ளே
காதலுறுமகனைக் கைக்கொண்டுபோய்விடுத்து
வாருங்களென்றுசொல்லி மன்னர்வழுவாக்களித்தார்
காரும்வெருண்டோடுங் கருங்கூந்தற்றோழியர்கள்
அந்தமொழிகேட்டே யந்தப்புரஞ்சேர்ந்து
கன்னிகற்பூரவல்லி கடிவாசலுட்புகுந்து
கண்ணீர்ததும்பிடவே காயம்நடுங்கிடவே
வண்ணமுகஞ்சோர்ந்து வாடிமிகவழுது
செல்வன்பிறந்ததினந் தேசத்துக்காகாதென்று
வல்வேந்தருன்மகனை வனத்தில்விடவாக்களித்தார்
எங்கட்கரசியரே யாங்களென்னசெய்வோமம்மா
செங்கோலரசரது சித்தமறியோமம்மா
என்றந்தத்தாதியர்க ளியம்புமுறைகேட்டு
குன்றினையொத்தகுயத்தாள் கூக்குரலிட்டேயழுது
கண்ணிலறைந்துகொண்டாள் கையைமுறித்துநின்றாள்
மண்ணில்விழுந்தழுதாள் மார்பிலடித்தழுதாள்
கூந்தல்விரித்தாசி கூச்சலிட்டுத்தானழுதாள்
ஏந்திழைமார்களேயான் என்னசெய்வேனென்றழுது
மைந்தன்றனையிழந்த மாபாவியென்பாரே
அழகுமகனில்லாத அரும்பாவியென்பாரே
காட்டில்மகனைவிட்ட கடும்பாவியென்பாரே
நாட்டிற்பலபேர்கள் நகைத்திழந்துசொல்வாரே
என்னசெய்வேன்சிவனேயென் றேங்கிமிகததுடித்து
தன்விதியைத்தானினைந்து சலித்துமனதுநொந்து
முட்டியழுதாள்மகன் முகம்பார்த்துத்தானழுதாள்
கட்டியெடுத்துமகன் கண்முகத்தைப்பார்த்தழுதாள்
அப்பாமகனேயென் னருமைத்திருமகனே
இப்பாரையாளவந்த வெங்கள்குலக்கொழுந்தே
தேடக்கிடையாத செழுந்தேனேதெள்ளமுதே
நாடாளவந்தவெங்கள் நாயகமேநற்றிருவே



3 மதுரைவீரனை வனத்தில் விடச்சொன்னது.

தவமாதவமிருந்து தான்பிறந்தரத்தினமே
அவமானக்காட்டில்விட அரசர்மனங்கொண்டாரே
மாபாவியென்வயிற்றில் வந்துதித்தபாக்கியமே
பூபாலருனைவனத்தில் போக்கிவிடச்சொன்னாரே
இந்தவிதிக்கோ நீ என்வயிற்றில்வந்துதித்தாய்
அந்தப்பிரமனுனக் கமைத்தவிதியிதுவோ
பிள்ளையில்லையென்று பெருந்தவசு நான்புரிந்தேன்
வள்ளலில்லையென்றுபல வகைவிரதம்நான்புரிந்தேன்
ஐயோதிருவுளமே ஆதிசிவனேயென்று
கையைநெரித்து கத்திச்சலித்திளைத்தாள்
பக்கலிலேநின்றிருந்த பாங்கிமார்தானெடுத்து
மிக்கதுயர் நீங்க மெல்லியரைத்தேற்றுவித்தார்
பட்டணத்துமன்னர் பலராசர்மந்திரிகள்
திட்டமுள்ளசேவர்கள் சேனைத்தலைவர்மற்றோர்
கற்பூரவல்லி கடினையினுட்புகுந்தார்
கற்பூரவல்லியருங் கணவனையேகண்டழுதாள்
துளசிமகாராசர் துயரமிகவடைந்து
தளராதேயென்றந்த தையலரைத்தேற்றுவித்து
மன்னன்மனைவியரு மண்ணுருகத்தானழவே
அன்னை துயர்கண்டு அனைவோருமேயழுதார்
பட்டணத்திலுள்ளவர்கள் பார்த்துமிகவழுதார்
அட்டதிக்குமன்னர் அழுதுமிகச்சூழ்ந்துவர
அப்போதுதங்கத்தினு லமைத்திலங்குந்தட்டினுள்ளே
இப்போதுபாலகனை எடுத்துவளர்த்துமென்று
பாங்கியர்க்குபார்வேந்தன் பகர்ந்திட்டானப்பொழுது
தாங்கினாரம்மகனைத் தாதியர்பொற்றட்டதனில்
வைத்துத்துளசி மகாராசர்முன்புவந்தார்
இத்ததியேதூதுவரே யெடுத்துமுத்துத்தண்டிகையை
கொண்டுவரச்சொன்னவுடன் கொண்டுவந்தார்பொற்சிவிகை
மண்டலமாளும் மகுடமன்னரக்கணமே
மன்னுமுத்துத்தண்டிகையில் மைந்தனையேற்றுவித்து
இந்தக்குழந்தைதனை எல்லோருங்கொண்டேகி
காட்டில்விட்டுவாருமென்று கட்டளையிட்டானரசன்
கேட்டவர்கள்செங்கோலின் கீழ்படிந்துபோகலுற்றார்
முத்துச்சிவிகையைச்சூழ் முடிமன்னர்முக்கோடி

யானையொருகோடி யணித்தேரிருகோடி
சேனைபலகோடி ஜெயவீரரெண்கோடி
ஆட்டமும்பாடல்களும் அதிர்வேட்டுக்கோஷ்டமுடன்
கூட்டமுடன்மகனை கொண்டுநடக்கலுற்றார்
காசிநகரைவிட்டு கடுகவெளியில்வந்தார்
தேசிகுலமன்னர்வாழ் சிறப்பானவீதிவிட்டு
யானைவிலைமதிக்கும் மருமன்னர்கள்வீதிவிட்டு
சேனைத்தலைவர்வாழும் சிங்காரவீதிவிட்டு
குதிரைவிலைமதிக்கும் குச்சிலியர்வீதிவிட்டு
சதுரில்நடனமிடுந் தாசியர்கள்வீதிவிட்டு
போட்டசட்டைவாய்காத பொந்திலியர்வீதிவிட்டு
கொட்டிப்பலதொழில்செய் கொல்லர்வாழ்வீதிவிட்டு
காசிநகரைவிட்டுக் கானகத்திற்போய்ப்புகுந்து
தேசமன்னரெல்லவருஞ் சிறந்தவனம்புகுந்து
காரைபடர்ந்தவனங் கருங்களாப்பூர்க்கும்வனம்
சூரைபடர்ந்தவனம் சுண்டைக்காய்காய்க்கும்வனம்
குன்றுமலைகளிலே கொடும்புலிகள்சூழும்வனம்
ஆறுமடுவுகளும் அழகாய்நிறைந்தவனம்
கூவும்பெருமிருகம் குலாவியிருக்கும்வனம்
சிங்கம்கரடி செந்நாய்நெருங்கும்வனம்
எங்கும்விஷப்பாம்பு இருந்துகுலாவும்வனம்
இன்னம்பலமிருக மிருக்கும்வனந்தனிலே
மென்னுமகனைமுத்து வண்சிவிகையோடிறக்கி
திட்டமுள்ளபுல்லிடத்தைத் தெரிந்துமவர்பார்த்து
தட்டோடுபாலகனைத் தாழவேதானெடுத்து
மண்ணில்வைத்தபாலன்றன் மதிமுகத்தைப்பார்த்தழுதார்
கண்ணீர்சொரிந்தார்கள் கதறியழுதார்கள்
திரண்டுவந்தசேனைகள் திகிலடைந்துதானழுதார்
இருண்டவனந்தனிலே எல்லோருந்தானழுதார்
காட்டைவிட்டுநாட்டிற் கடுகநடந்தார்கள்
மலைகள்குகைகடைந்து வந்தார்கள்பட்டணத்தில்
கோட்டையிற்செல்வதற்குக் குறுகிநடந்தார்கள்
உலகாளுமன்னவர்க்கே வுத்தாரஞ்சொன்னார்கள்
அவரவர்வாழிடத்திலன்பாயிருந்தார்கள்
நகையில்லாப்பாலகனுக்குநடக்கின்றவாறுசொல்வேன்

## மதுரைவீரனுக்கு நாகமுதவிசெய்தது.

பாலகனுமப்போது பாரவனந்தனிலே
ஓலமிட்டுத்தானலறி ஓங்கியழுகையிலே
மாமரத்தினிழலிலே மைந்தன் தனித்திருந்து
தாமரைநீர்போலத் தயங்கியழுகக்கண்டு
மாணிக்கநாகமது மனதுமிகவுருகி
ஆணிப்பொன்போல்விளங்கு மரசனைமைந்தன்பக்கலிலே
வந்துபடம்விரித்து மதிமுகத்தைத்தான்பார்த்து
அந்தக்குழந்தைக் கதிகமுத்தந்தான்கொடுத்து
புத்தியும்யோகமும் பொருந்தியிருப்பதற்கு
நாக்கில்சரஸ்வத்தான் நன்றாகத்தான்விழங்க
முகத்தில்திருவழகு முனினின்றுதான்விளங்க
எதிர்த்தவரைவெல்ல எமனது அட்சரமும்
நீசனில்லாவீட்டில் நிட்சயமாய்த்தான்பார்த்து
அலங்காரவீரனென்று ஆனதொருபேரும்வைத்து
மன்னர்களைவெல்ல மந்திரவாள்கைகொடுத்து
வீரப்பனென்றுசொல்லி விதமாய்மதுரையிலே
பூசைபலிகொடுத்துப் போற்றித்துதித்திடவே
இந்தப்புவியோரை யென்னென்றுகார்த்திடவே
மீனாட்சிகட்பத்தடி விளங்கவே நீயிருப்பாய்
முன்பூசைகொண்டு முப்பூசைதான்பெறுவாய்
பத்துவயதினிலே படைமுகம்வென்றிடுவாய்
கள்ளரைவென்று கனமதுரையாண்டிடுவாய்
பெண்களினாலே பெரும்பதத்தைச்சேர்ந்திடுவாய்
என்றுமேசொல்லி யினிதாகத்தான்வாழ்த்தி
தேவாமிர்தத்தை தினந்தோறுந்தான்புகட்டி
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே

## மதுரைவீரனை சக்கிலிச்சி கண்டெடுக்கிறது

காசிநகரைச்சேர்ந்த கண்மானகிராமமதில்
பாலைவனந்தனிலே பாதரட்சைதைத்துவளர்
மாதிகச்சின்னான் மனைவியாம்சக்கிலிச்சி
மைந்தனில்லையென்றுசொல்லி மதிமயங்கிதானிருந்து
பாதரட்சைதானம் பரிவாகத்தான்கொடுத்து

காசிவிஸ்வநாதனையும் கனகவிசாலாட்சியையும்
பூசையனுஷ்டானம் புதியதவம்புரிந்து
மாதிகன்தேவியும் மண்ணுந்தரைமெழுகி
போசனஞ்செய்து புண்ணியமிகச்செய்து
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே
பாங்கானமாதிகனும் பாதரட்சைதைத்திடவே
வாறுகளும்சம்புகளும் வகையாகவூரவைக்க
ஆவாரம்பட்டைக்கு அன்புடனேபோவென்று
நல்லதென்றுசொல்லி நலமுடனேமங்கையுமே
அசைத்துநடந்தாளே அந்தவனந்தானோக்கி
காசிநாடாளுமன்னன் கண்மணிக்குநேரான
பாலனிருக்குமந்த பாரவனம்நோக்கி
வழிகூடிப்போகையிலே மங்கைநல்லாளப்போது
காணாதநற்சகுனங் கண்டாளேகண்களிக்க
காகம்வலமாச்சு காடையிடமாச்சு
மங்கிலியப்பெண்கள் வாழ்த்திவரக்கண்டே
தையனல்லாள்தானுந் தண்ணீரைத்தான்கொண்டு
நிறைகுடங்கொண்டு நேராகத்தான்வரவே
கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
அசைந்துநடந்தாளே அன்னம்போலவ்வனத்தில்
காட்டில்புகுந்தாளே காரிகையுமப்போது
அரிவாளுங்கைப்பிடித்து ஆவாரம்பட்டைவெட்டி
பட்டையெடுத்துக்கட்டி பயணமதாய்வருகையிலே
மாமரத்தின்கீழே மைந்தனைக்கண்டாளே
நாகத்தைப்போற்றிசெய்து நலமுடனேதெண்டனிட்டு
மன்மதனுக்கொப்பான வடிவுள்ளபாலகனே
கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
பிள்ளைகலிதீர்க்கவந்த பெருமையுள்ளமைந்தனென்று
வாரியெடுத்து மார்போடேதானணைக்க
பைங்கிலியாள்தன்னுடம்பு பசுமைநிறந்தானாச்சு
பாரஸ்தனங்களிலே பாலுஞ்சொரிந்திடவே
பாலகனும்பால்குடித்து பசியாறினபின்பு
கோலமயிலனையாள் குளிர்ந்துமனமகிழ்ந்து
பாலகனைமடியில்வைத்து பட்டையுந்தானெடுத்து
வேர்த்துவிரிவிரித்து வீட்டுக்குவாருள்காண்.

இவள்வருவதற்குள்ளாக இனனேரமென்னவென்று
சந்தேகந்தோன்றி சக்கிலியன் தானெழுந்து
கையில்தடியெடுத்துக் கனத்ததொருதோளில்வைத்து
பூமியதிர்ந்திடவே பொற்கொடியைத்தான்தேடி
கோபமிகக்கொண்டு கொம்பனையாள்முன்வந்து
கண்டானே பெண்ணணங்கைக் கண்கள்செவந்திடவே
இந்நேரங்கானகத்தி லென்செய்தாயென்றுசொல்லி
சக்கிலியன்தானுந் தடியெடுத்துநோக்கையிலே
அடியாதேயென்கணவா அதிசயஞ்சொல்லுகிறேன்
கோபந்தைத்தானடக்குங் குணமுள்ளபத்தாவே
மைந்தனில்லாததினால் மாதவங்கள்செய்தோமே
பிள்ளைகவலை பெருங்கவலைநிர்ந்ததிப்போ
ஆதிசிவன்கர்த்தனமக் காண்பிள்ளைதான்கொடுத்தார்
மாணிக்கம்போலிந்த மைந்தன்றனையளித்தார் [ள்
இத்தாரும்பிள்ளையென் றேந்திழையுந்தான்கொடுத்தா
தட்டோடுபாலகனை தான்வாங்கிச்சக்கிலியன்
இன்பக்கடல்குதித்து யிருபுஜமும்பூரித்தான்
வீட்டிலேதான்வந்து மெல்லியுடன்சின்னானும்
சக்கிலிச்சிகையில் தனயன்றனைக்கொடுத்து
தச்சனொருவனைப்போய்த் தானழைத்துவந்தான்காண்
மைந்தனுக்குத்தொட்டில் வளமுடனேசெய்யுமென்றான்
அப்படியேதச்ச னமைத்தானேதொட்டிலுமே
பச்சைமரகதமும் பாங்குடனேதானமைத்து
தங்கக்கொலுசுசெய்து தான்பூட்டித்தச்சனுமே
கொடுத்திடவேமாதுகனுங் கோதையருமேவாங்கி
பாலகனைத்தாமெடுத்து பதிவானதொட்டிலிலே [ள்
கண்மணியைத்தான்வளர்த்தி காரிகைதாலாட்டலுற்று

மதுரைவீரனுக்குத்தாலாட்டல்.

ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ
புத்திமானேயுந்தனுக்கு புகழ்ச்சியுடன்தாலாட்ட
நித்திரைசெய்யுமந்த நேரானகண்மணியே (ஆ)
கண்ணேயுறங்குறங்கு கற்பகமே நித்திரைசெய்
கண்ணேயென்கண்மணியே கற்கண்டேசக்கரையே (ஆ
ஆதிசிவன்மகனே ஆயன்மருமகனே
சோதிக்கவந்தவனே துய்யகணபதியோ (ஆ)

தேனுனகண்ணே தெவிட்டாத்தெள்ளமுதே
பாலூரும்வாயுடைய பாலகனே பைங்கிளியே (ஆ)
கானகத்தில் நீயும் கவிழ்ந்துவிளையாட
நாகனுந்தெடுத்துவந்த நாயகமேகண்வளராய் (ஆ)
எந்தனுக்குப்பிள்ளையென்று யீஸ்வரனார்தந்தகண்ணே
சுந்தரமாய்நித்திரைசெய் சொர்ணமபத்தொட்டிலிலே (ஆ)
பிள்ளைகவலை பெருங்கவலைதீர்க்கவந்த
வள்ளலேகண்ணே மணியேமணிவிளக்கே (ஆ)
மாறுபடாப்பாலகனே மாசிலாக்கண்மணியே
வேறுபடாப்புத்தமுதே விண்மணியேகண்வளராய்(ஆ)
அங்கயற்கணம்மை அருள்பெற்றபாலகனே
எங்கள்குடிதழைக்க யென்மகனேகண்வளராய் (ஆ)
இப்படித்தாலாட்ட எத்தசிறுபாலகனும்
நித்திரையுஞ்செய்து நினைவுவந்துபாலகனும் (ஆ)
பசியெடுத்துப்பாலகனும் பதறியழுகையிலே
தாவியேசக்கிலிச்சி தானெடுத்துப்பால்கொடுத்தாள்(ஆ)
பால்கொடுத்துப்பசியாற்றிப் பாலகனுக்கப்பொழுது
எண்ணெய்தலையிலிட்டு யிளம்வெந்நீர்தான்வார்த்து(ஆ
உச்சியூதித்துடைத்து உடம்பெல்லாந்தான் துவட்டி
திட்டமுள்ளநெற்றியிலே திருநீற்றுக்காப்புமிட்டு (ஆ)
நேரானநெற்றியிலே திலக்காப்புத்தானுமிட்டு
நீலவிழிக்கண்களுக்கு நேர்மையுடன்மையெழுதி (ஆ)
பிள்ளைக்குத்திருஷ்டி பிரியமுடன்சுற்றுதற்கு
நெல்லும்அறுகும் நேரானமஞ்சளுடன் (ஆ)
பருத்திவிரைசுண்ணாம்பு பரிவாகத்தான்பிசைந்து
தண்ணீர்முகந்துவந்து தாம்பாளத்திற்போட்டு
இப்படியாக யினிவளர்க்குநாளையிலே
மாதிகனைத்தானழைத்து மங்கையருமேதுசொல்வாள்

## மதுரைவீரனுக்கு காதுகுத்தல்.

மூன்றும்பிராயத்தில் முத்தமிட்டுக்காதுகுத்த
நல்லநாள்கேட்டு நட்சத்திரந்தான்பார்த்து
திட்டமுள்ளதட்டானைச் சீக்கிரமாயழையுமென்றார்
அந்தநல்லாள்சொற்கேட்டு ஆனதொருமாதிகனும்
கூட்டிவந்துதட்டானைக் குழந்தையைப்பாருமென்றான்

பார்த்துமந்தத்தட்டானும்பாலகனுக்கேற்றாற்போல்
தங்கத்தால்கம்பி சதுரமாகத்தான்வளைத்து
கீழ்க்காதைமேற்காதை கிரமமாய்க்குத்திவிட்டான்
படியரிசிதட்சணையும் பாக்கிலையுஞ்சர்க்கரையும்
அத்தனையுந்தான்கொடுத்து அனுப்பினான்தட்டானை
மாதிகனும்மங்கையரும் மனதுமிகத்தான்குளிர்ந்து
சந்தோஷமாக தயவாயிருபேரும்
இப்படியாக விருக்கின்றவேளையிலே

மதுரைவீரன் சக்கிலியன்வீட்டில் வளருகிறதை
காசிராசாவுக்குத் தெரிவித்தல்.

காசிப்பட்டணத்திருக்கு கனத்தவெகுமாந்தர்களும்
மாதிகச்சின்னனுக்கு மைந்தன்வந்தசேதிதன்னை
பட்டணத்திலுள்ளஜனம் பாங்குடனேதாமறிந்து
இராஜனுடபிள்ளையென்று நலமாகவேோடிவந்து
மாதிகச்சின்னனும் மைந்தனைவளர்க்கிறான்
என்றவர்கள்சொல்ல இந்தச்சமயத்தில்
இப்பெரியபட்டணத்தி லிருந்தோமேயானக்கால்
தன்பிள்ளையென்று தானழைத்துக்கொன்றிடுவான்
மறுதேசம்போய் மங்கையரே நாம்பிழைப்போம்
அப்படியேநல்லதென்று அன்பாயிருவருந்தான்
மைந்தனைத்தானெடுத்து மறுதேசம்போனார்கள்
காடுமலைதாண்டி கடுகிநடக்கலுற்றார்
பொம்மணன்சீமைக்கு பொட்டெனவேவந்தார்கள்
யாதென்றுசொல்லியழைப்பித்தார்பொம்மணனும்
எந்தவூரேன்னுடு எங்கிருந்திங்குவந்தீர்
என்றதற்குமாதிகனும் எந்திலையுஞ்சொல்லுகிறான்
காசியென்னும்பட்டணத்தை கடந்தவரலாற்றைக்கேள்
பஞ்சைகள்பிழைக்கபரதேசம்நாங்கள்வந்தோம்
வயிறுபிழைக்க மறுதேசம்நாங்கள்வந்தோம்

மாதிகச்சின்னன் பொம்மணநாயக்கனிடத்திற்
சேவகத்திற் மர்தல்.

அந்தநல்லசேதி அறிந்தானேபொம்மணனும்
என்னிடத்திற்சேவகமா யிருப்பாயோமாதிகனே

அப்படியேநல்லதென்று அமர்த்தினன்பொம்மணனும்
சேவகஞ்செய்து சீருடனேதானிருந்தான்
சந்தோஷமாகத்தயவாயிருக்கையிலே
பிள்ளைக்குச்சிங்காரம் பிரியமுடன்பூட்டலுற்றான்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நிழல்கண்ணாடியுங்கட்டி
காதிலேமந்திக்காய் கனமாகத்தொங்கலிட்டு
பச்சைக்கல்முருகு பவளத்தால்தாழ்வடமும்
காலிற்சிலம்பணிந்து கைக்குத்தங்கக்காப்புமிட்டு
பூணாரமெல்லாம் பூட்டினன்மாதிகனும்
நாளொருமேனியுமாய் நலமாகத்தான்வளர்த்தான்
பத்துவயதானதின்மேல் பதினாலாம்வயதுதன்னில்
சரிகைசந்திரகாவி தலைப்பாகைகட்டியபின்
வண்ணக்கம்பிசோமன் வகையாயுடுத்தியங்கே
பட்டுக்கம்பிசோமன் பாங்காய்வரிந்துகட்டி
இடதுபுறந்தொங்கலிலே ஏமனுடஅட்சரமும்
வலதுபுறந்தொங்கலிலே வடமலையானட்சரமும்
பார்வதிகடாட்சத்தால் பரிவாகவுண்டாச்சு
பஞ்சவர்ணப்பட்டாடை பாங்கானசாலுவையும்
முன்கையிற்சந்தனமும் முறுக்கிவிட்டமீசைகளும்
கஸ்தூரிப்பொட்டுமிட்டுக் கனத்ததிருமார்பிலுமே
சந்தனமும்புனுகுந் தாராளமாய்ப்பூசி
இப்படியாய்த்தானே யிருந்துவருகையிலே

## மதுரைவீரன்பராக்கிரமம்.

குச்சிவுருமாலைக்கட்டிக் கூசாமல்வீரையனும்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
காலில்மிதியடியுங் கையிலுண்டைவில்ப்பிடித்து
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிர்க்கத்தான்கண்டவரை எண்ணியேபாராமல்
கண்டமுனிராட்சதரைக் கண்டதுண்டமாக்கிடுவான்
காளிகதவடைக்க கண்டமுனிதெண்டனிட
வேட்டைகளாடுவதும் வேங்கைபுலிகுத்துவதும்
மாதிகன்சொற்கேளான் வனங்களிலேபோய்விடுவான்
கரடிபுலிசிங்கம் காட்டானை கொல்கிறதும்

வேஷங்கள்மாறி வீட்டில்வருகிறதும்
வருகிறதைக்கண்டு மாதாமனமகிழ்ந்து
வந்ததொருவீரனுக்கு வரிசையுடனன்னமிட்டு
குத்துப்பருப்புமிட்டுக் கூசாமல்நெய்வார்த்து
சுண்டக்கறிவகையுஞ் சுகிப்பானபோஜனமும்
வாழைப்பழஞ்சர்க்கரையும் வகைவகையாய்த்தானமைக்
சாப்பிட்டுக்கையலம்பித் தாம்பூலந்தான்றரித்து [க
பள்ளியறையிற்புகுந்து பாங்கானகட்டிலிலே
பள்ளிகொண்டுவீரையனும் பண்பாயெழுந்திருந்து
இப்படித்தானும் இருக்குமந்தவேளையிலே

தொட்டியன்மகள் ருதுவானயிடத்தில்
மதுரைவீரன் காவலிருந்தது.

---

பட்டணத்தையாளும் பரிவானதொட்டியனும் (தான்
பொம்மணநாயக்கன்மகள் பொம்மியம்மாளென்பவள்
புத்தியறிந்ததின்மேல் பூவைதனைபொம்மணனும்
ஊருக்குமேற்கே ஒருநாழிதூரத்திலே
பச்சைக்குடிசைகட்டிப் பண்பாயலங்கரித்து
பொம்மியம்மாளைப் பொங்கமுடன்கூட்டிவந்து
அந்தக்குடிசைதன்னில் அமர்ந்திருக்கச்செய்துவைத்து
மாதிகச்சின்னனை வரவழைத்தானுடனே
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
காட்டானைசிங்கம் கரடிபுலிவாராமல்
கள்ளர்திருடர் கடுவிஷங்கள்தீண்டாமல்
காற்றுமழைவந்ததென்று காவல்தப்பிப்போகாமல்
இருட்டுக்கருக்கலென்று ஏமாந்திருக்காமல்
முப்பதுநாளும் முழித்துக்கொண்டுதானிருந்து
பைங்கிளியாள்தன்னைப் பத்திரமாய்க்கார்த்திருப்பாய்
காரும்பிள்ளாயென்று கட்டளையுமிட்டானும்
நல்லதையாவென்று நலமுடனேமாதிகனும்
மாதிகச்சின்னனும் மாளிகைக்குத்தான்வந்து
குச்சுவுருமாலைக்கட்டி கொடிவாளுங்கையேந்தி
கச்சைவரிந்துகட்டிக் கட்டாரிகைப்பிடித்து
அம்புவில்லுங்கையேந்தி ஆயுதங்கள்தான்தரித்து

பொம்மியம்மாள்காவலுக்கு போய்வாரேன் மாதிகன்னான்
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
காகமணுகாமல் கருக்குருவிநாடாமல்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
இப்படியாக இவன்காக்கும்நாளையிலே
வருணபகவானும் வந்துகவிழ்ந்ததினால்
ஈரேழுலகமெல்லாம் இருள்வந்துசூழ்ந்ததினால்
வயதுசென்றமாதிகனும் மனதுநொந்துமெய்நடுங்கி
பொம்மியம்மாள்காவலுக்குப் போகக்கூடாமையினால்
மனதிலேயெண்ணி மகனுடனேசொல்லலுற்றான்
வீரப்பன்தான்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து
இந்தயிருட்டிலேதான் எப்படி நீர்போவீரையா
பிள்ளையென்றுநானிருக்க பெரியவர் நீர்போகலாமோ
நான் மங்கையுடகாவலுக்கு மகிழ்ச்சியாய்போய்வாரேன்
என்றுசொல்லித்தானும் எழுந்திருந்தான்வீரையனும்
எழுந்திருந்துதான்போய் எண்ணமற்றகாளையவன்
சலவைக்கல்மண்டபத்தில் சாமிபோல்நின்றுகொண்டு
சம்பங்கிஎண்ணெயால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிரைக் சோணமல்சிக்கறுத்து
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்த்தான்முடித்து
சிவாசிவாவென்றே திருநீரணிந்துகொண்டு
சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மார்பதனில்
பஞ்சவர்ணப்பட்டாடை பாங்காயலங்கரித்து
சிவந்தவுருமாலை செண்டுகட்டும்பாவனையாய்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
முன்னின்றதொங்கலிலே மோககன்னிஅட்சரமாம்
பின்னின்றதொங்கலிலே பிர்மாவின்அட்சரமாம்
உள்ளேகபாயணிந்து உடம்பெல்லாம்அங்கிபூண்டு
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
பாசிபந்துதாயித்தும் பாங்காகக்கையில்கட்டி
ஆபரணமெல்லாம் அலங்கரித்துத்தானுமப்போ
எட்டுதுலாங்கத்தி இத்துடனேகேடகமும் [த்து
உண்டைவில்லுங்கைப்பிடித்து உடைவாளுந்தான்தரி
பாக்குடனேவெற்றிலையும் பண்பாகத்தான்வாங்கி

மாதிகச்சின்னானே வந்துகண்டேயந்நேரம்
பொம்மியம்மாள்காவலுக்கு போகவிடைதாருமையா
அப்படியேபோய் நீ அனுதினமும்காவல்செய்வாய்
என்றுசொல்லக்கேட்டு ஏத்தமுள்ளவீரையனும்
நடந்தான்காண்தென்மதுரை நாலுதிக்குந்தானதிர
சிங்காரத்தோப்பைச் சீக்கிரமாய்த்தான்பார்க்க
அலங்காரத்தோப்பில் அச்சமற்றுத்தான்சேர்ந்தான்
பைங்கிளியாள்தன்குடிசை பக்கமேபோய்ச்சேர்ந்தான்
அந்நேரவேளையிலே ஆரணங்குபொம்மியம்மாள் [கு
குடிசைவிட்டுவெளியில்வந்து கொப்பெனவேதான்பார்த்
தென்மதுரை நிற்கிறதை தேன்மொழியுங்கண்டாளே
நிற்கிறதைக்கண்டு நெடுநேரமெய்மறந்து
ஆரோதெரியாது அர்த்தராத்திரிவேளைதன்னில்
மாதிகனல்லயிவன் மாற்றானுக்கானதென்று
ஆரடா நிற்கிறவன் அஞ்சாமற்சொல்லிடுவாய்
ஆரோவெனச்சொல்லி அஞ்சாதேமங்கையே நீ
மாதிகச்சின்னான்பெற்ற மைந்தன்தானென்றான்
நல்லதென்றுசொல்லி நடந்தாள்குடிசைக்குள்
பைங்கிளியாள்போய் படலெடுத்துச்சாற்றியபின்
கட்டிலின்மீதிருந்து கட்டளைகள்சொல்லுகிறாள்
பத்திரமா நீயும் படுத்திரடாவென்றுசொன்னாள்

மதுவீரன் பொம்மியம்மாளிடஞ் சேருதல்.

---

மதுரையன்தான்கேட்டு வகையுடனே பேசலுற்றான்
போட்டதொருகட்டிலில் போய்படுத்தாய்பெண்ணே நீ
ஒண்டியொருவனுமாய்உட்கார்ந்திருப்பேனோ
மங்கையரே நானும் மழையில்நனைகிறது
ஆண்பாவம்பொல்லாது அதட்டினால்தோஷமடி
இருட்டில்லொருவனுமா யிருப்பேனோபெண்ணரசே
குடிசைக்குள்வரவழைத்தால் கோடிதர்மமுண்டுனக்கு
இவ்வார்த்தைகேட்டிருந்த ஏந்திழையுங்கூறுகின்றாள்
சக்கிலியப்பயலுக்குத் தலைப்புழுகு ஆடுகுது
எகுத்தாளம்பேசி எடுத்துரைக்கவந்தாயடா
காவல்செய்யவந்தாயோ கற்பழிக்கவந்தாயோ
என்னபினத்துகிறாய்எழுந்திருந்துபோடா நீ

கூவென்றால்கேட்டு கோடிபடைவந்துவிடும்
உந்தனையும்வெட்டி உயிர்க்கழுவில்போட்டிடுவார்
பையலென்றபோதே பதைக்குதடியென்மனது
தலைவெட்டிப்போனாலும் சக்கிலிநான்விடுவதில்லை
உந்தனையும்விட்டெந்த னுயிர்தானும்போகாது
ஈரத்தில் நின்றால் என்னுடம்புக்காகாது
எந்தனுட நீயும் இசைவாகத்தான்கூடி
குடிசைக்குளேயழைத்து கூடினாலுந்தனுக்கு
கோடிதருமமுண்டு கோதையேநம்படி நீ
சக்கிலியனானாலுந் தனஞ்சயனானவண்டி
கன்னியேகொஞ்சநாளில் காட்டுகிறேன்சவுரியத்தை
இந்நேரவேளைதனி லிருவருமேகைகோர்த்து
பேசியிருப்பமடி பெண்மயிலேமங்கையரே
காமன்கணையார் களையாய்வருகுதடி
மதனனகணையால் மயக்கம்வருகுதடி
பஞ்சணைமெத்தையின்மேல் பக்கத்திடங்கொடுத்து
இருவரும்பேசி யிருப்பமடியெண்ணரசே
பேசியிருந்தேமானால் பேதையரே நீதானும்
சந்தனங்கஸ்தூரி தான்பூசிவாழ்ந்திருப்பாய்
பால்பழமுஞ்சர்க்கரையும் பசியாமலுண்டிருப்பாய்
வெற்றிலையும்பாக்கும் விதவிதமாய்த் தானுகர்வாய்
ஏதேதுகேட்டாலும் எடுத்துவந்துதான் தருவேன்
மங்கையேநான்கேட்கிறது உன்மனதுமுருகலேபோ
கல்லுங்கரையுமடி கடலும் இருகுமடி
உன்வடிவுக்கேற்ற உத்தமனும்நான்தாண்டி
ஏதுக்குமஞ்சாதே இளமயிலேபெண்ணணங்கே
இப்படியாக யின்பமுடன்கேட்கையிலே
பேடைமயில்போல பெண்ணணங்குகேட்டிருந்து
யெண்ணதுமெண்ணி யேங்கியழுகலுற்றாள்
ஈஸ்வரனேயென்தலையில் என்னயெழுதிவிட்டாய்
கன்னிகழியாமல் கல்யாணஞ்செய்யாமல்
சக்கிலியன்கற்பழிக்கத் தலையிலெழுதினையோ
என்றுசொல்லிக்கன்னியரு மேங்கிமுகம்வாடி
முத்துபோல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டாள்
பவளம்போல்கண்ணீரைப்பக்கமெல்லாஞ்சோரவிட்டாள்

அழுதுமுகம்வாடி அவளிருக்குங்குடிசைக்குள்
மண்டியிட்டுத்தானுழைந்து மடிமேலுட்காரவைத்து
மங்கையின்றன்கண்ணீரை மன்னவனுந்தானுடைத்து
ஏந்திழையேயுந்தனுக்கு என்னவிசாரமடி
ஆறென்றிருக்கிறாய் அருங்கிளியேபெண்மயிலே
காசிராசன்செற்ற கருத்துள்ளவீரனடி
மகிமைதெரியாமல் மயங்குறாய்பெண்மயிலே
என்றந்தமன்னவனு மெடுத்துரைக்கவப்போது
மங்கையரும்பார்த்து மனமுங்குளிர்ந்தாளாம்
தெளிந்துமுகமலர்ந்து தேன்மொழியாளப்போது
கண்குளிரப்பார்த்து கன்னிகையுமேதுசொல்வாள்
முன்னழகும்பின்னழகும் மூவுலகிற்கிட்டாது
மார்பழகைக்கண்டால் மயங்குவார்கோடிபெண்கள்
உருமாலின்கட்டழகும் உத்திராட்சந்தன்னழகும்
யாரித்ததோளழகும் பங்கயப்பூங்கையழகும்
வட்டநுதலழகும் வாய்ந்தமைப்பொட்டழகும்
இவ்வழகெல்லாம்பொம்மி யெடுத்துரைக்கவீரதுரை
சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மங்கையற்கு
புனுகுஜவ்வாது பொங்கமுடன்பூசலுற்றான்
மல்லிகைப்பூசண்பகப்பூ வரிசையாய்த்தான்தரித்தார்
உத்தரியந்தானெடுத்து உத்தமிமேல்தான்தரித்தான்
மங்கையருமப்போது மனமகிழ்ந்துகட்டிலின்மேல்
என்னைவலதழிக்க எத்தனைநாள்காத்திருந்தாய்
மகாதேவரருளினால் மண்பிடித்தவேளையிலே
மன்னவனேயெந்தனுக்கு வளர்ந்திரோபூமிதனில்
என்றுசொல்லிதானகைத்து இசைவாகக்கன்னிகையும்
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகமுன்புவைத்தாள்
பாக்கிலையுந்தானருந்திப் பரிவாய் மனமகிழ்ந்து
ஆனந்தங்கொண்டு அன்பாயிருவர்களும்
பண்பாய்ச்சிலவசனம் பகர்ந்து அகமதனில்
இருக்கும்விஷயமெல்லாம் ஏராளமாயுரைத்து
ஒருவர்க்கொருவர் உற்சாகங்கொண்டு அந்நாள்
கந்தருடன்வள்ளியம்மை கனிவாயிருந்ததுபோல்
பார்வதியுமீஸ்வரனும் பட்சமுற்றுவாழ்ந்ததுபோல்
மதுரை மகாவீரன் மங்கைபொம்மியாளுடனே

இருந்துமகிழ்ந்தான் ஏற்கையுடனன்னேரம்
புருஷனேதெய்வமென்று பொற்கொடியும்தானினைந்து
தென்மதுரைவீரனுக்கு தெண்டனிட்டுநிற்கையிலே
மன்னவனுமப்போது மங்கையனைத்தாளெடுத்து
காலில்விழுந்த காரணத்தைககேட்கலுற்றான்
பெண்ணாசிவாய்திறந்து பிரியமுடன்சொல்லுகிருள்
மானிடவர்தானே மகாதேவர் நீர்தானே
எவ்வுலகராஜாவோ ஈஸ்வரனார் தன்மகனே
ஆர்பெற்றகண்மணியோ அரிவையர்க்குகூறுமென்ருள்
மாதிகன்வீட்டில்வந்த வகைதனைசொல்லுமென்ருள்
தாய்தகப்பன்பேருந் தனஞ்சயனேசொல்லுமென்ருள்
மதுரையான்வந்தவகை மங்கையரேசொல்லுகிறேன்
கைலாசநாதர் கிருபாகடாட்சமதால்
காசிமகாராசனுக்கு கண்மணியாய்நான்பிறந்தேன்
மாலையுடன்பிறந்தேனென்று வனத்திலேபோட்டுவிட்டார்
வனத்திலிருந்தஎன்னை மாதகியெடுத்துவந்தாள்
சக்கிலியன்வீட்டில் வளர்ந்தேண்டிதையலரே
என்றுசொன்னசொற்கேட் டினிதாய்மனமகிழ்ந்தாள்
பொழுதுவிடிந்ததுகாண் போய்ப்பிழையுமன்னவனே
நாளைப்பொழுதிலுன் நாகரீகம்பேசுகிறேன்
இப்படித்தானுமிருக்குமந்தவேளையிலே
கங்குல்விடிந்துக் கதிரோனும்வந்துதித்தான்
தேன்மொழியாள்குடிசைவிட்டு சீக்கிரமாய்வெளியில்வந்து
கிழக்குமுகமாயிருக்குங் கேணியிடம்போயதனிற்
கால்கைமுகஞ்சுத்திசெய்து கனிவாயுங்கொப்பளித்து
சிவசிவாவென்றே திருநீறுதானணிந்து
அரகராவென்றுசொல்லி ஐயனைத்தான்தொழுது
கோதைமயிலணையாள் குடிசைக்குள்தானுழைந்தாள்
மதுரைவீரன் தானும் மாதிகன்வீடுபோனான்
மாதிகனுமோடிவந்து மைந்தனைத்தான்றழுவி
இன்னேரமென்னசெய்தாய் எந்தனதுகண்மணியே
மழையில்நனைந்ததினல் மறந்துநான் தூங்கிவிட்டேன்
நல்லதென்றுகூட்டிப்போய் நலமுள்ளமாதிகனும்
மங்கையரேபெண்ணே மைந்தனுக்குஅன்னமிடு
மாதாமனமகிழ்ந்து வாழையிலைதான்விரித்து
சம்பாஅரிசி சமைத்தசாதம்படைத்து

தயிரெடுத்துவார்த்து தயவாய்ப்புசியுமென்ருள்
வற்றல்வடகம் வகையுடனே யூருகாய்
கூட்டிப்பழதுண்டான் குணமுள்ளவீரனுமே
உண்டுபசியாறி உத்தமனும் வீற்றிருந்தான்
கங்குல்வருமுன்னே கதிரோனும்போய்மறைந்தான்
இன்றையக்காவலுக்கு என்மகனேபோய்வருவாய்
நல்லதென்றுவீரையனும் நடந்தானேயப்போது

மதுரைவீரன் பொம்மியம்மாளுக்குத் தாலிதரித்தல்

பொன்னுபரணமெல்லாம் பூட்டியலங்கரித்து
ஆயுதமெலாமெடுத்து அரிவாளுங்கைப்பிடித்து
பார்த்தபேர்மோகிக்கப் பஞ்சவர்ணப்பொட்டுமிட்டு
மங்கைக்குந்தான்தரிக்க மங்கிலியங்கைக்கொண்டு
நாடிக்குடிசைகளே நடந்தானேவீரையனும்
மங்கைகுடிசைதனில் மன்னவனும்வந்துநின்ருன்
காரிகையுமப்போது கண்டுமனமகிழ்ந்தாள்
ஆனாலும்பெண்ணரசே அன்பாகச்சொல்லுகிறேன்
மங்கிலியங்கட்டாமல் மாதேயுனையணைந்தேன்
மங்கிலியஞ்சூட்ட மகிழ்ச்சியாய்வந்தேனடி
இந்தச்சொற்கேட்டு ஏந்திழையாளப்போது
கழுத்திலேமங்கிலியங் கண்டாரேயாமானல்
அம்மான்மார்கூடி பறுத்திடுவார்சந்துசந்தாய்
என்தகப்பன்தானும் இருதுண்டாய்வீசிடுவார்
இப்படியாக ஏந்திழையுஞ்சொல்முடித்தாள்
ஏதுக்குமஞ்சாதே யிளங்கொடியேபெண்மயிலே
ஆதிசிவன்பிர்மா ஆயனுடன்பார்வதியும்
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
அரனார்திருமகனும் ஆனைமுகப்பிள்ளையரும்
எல்லோரும்பார்த்திருக்க இந்தச்சிறுதாலிதனை
மஞ்சள்சரட்டில் வகைவகையாய்தான்கோர்த்து
சாணமெடுத்துவந்து சதுராகத்தான்மெழுகி
பிள்ளையார்தன்னை பண்புடனேதானிருத்தி
அறுகுபிடுங்கிவந்து அன்பாய்விநயகற்கு
புஷ்பங்கள் தூவியல்லோ போற்றிமிகத்துதித்து
பாதத்தின்முன்பாகப் பாங்கானதாலிதன்னை
வைத்துஇருபேரும் வணங்கியேதெண்டனிட்டு
சாம்பிராணித்தூபம் சதுராகத்தான்கொடுத்து

தேவர்களப்போது சிறப்பாகப்பார்த்திருந்தார்
அந்தநல்லவேளையிலே ஆண்சிங்க வீரையனும்
சரட்டுடனே தாலிதன்னைச் சாங்கமாய்த்தானெடுத்து
தேவர்களைநோக்கி தெண்டனிட்டுவீரையனும்
சிவசிவாவென்றுசொல்லித் திருமங்கிலியந்தன்னை
தோகைநல்லாள் தன்கழுத்தில் சூட்டினனப்போது
அந்நேரந்தேவர்களு மலங்காரமாகவேதான்
பூமாரிதானும் பொழிந்தார்களக்கணமே
ஆணிமுத்துவீரையனும் ஆரணங்குபொம்மியரும்
திட்டமுடனெழுந்து தீர்க்கமுடன்தேவர்களை
அடிபணிந்துதெண்டனிட்டு அன்பாகநின்றார்கள்
ஆசீர்வாதம்செய்து யாவரும்பரமளித்தார்
பொன்னுலகவாசலிலே போனார்கள்தேவரெல்லாம்
ஆணிமுத்துவீரையனை ஆரிழையாள்தான்பார்த்து
ஆதிசிவன்கர்த்தா அமர்ந்தசபைதானறிய
மங்கிலியந்தான்றரித்த மைத்துனரேவாருமென்று
கட்டிலிலிருவருமாய் கைகோர்த்துத்தானிருந்து
சிரித்துவிளையாடி தேன்மொழியுந்தானிருந்தார்
அன்பாய்விளையாடி ஆவலெல்லாந்தீர்ந்தார்கள்
தீராதஆசையெல்லாந் தீர்த்துஇருவருமாய்
வாருங்கள்மைத்துனரே வார்த்தையொன்றுகேளுமென்
முப்பதுநாளும் முடிந்ததுகாண் நாளையுடன் (றுள்
நாளையிக்குடிசை நலமாகத்தான்பிடுங்கி
மாளிகைக்குத்தானழைக்க வருவார்காணென்தகப்பன்
உன்னைவிட்டுநான்பிரிந்து உகந்துமிருப்பேனோ
இருவருமாய்க்கூடி யினிதாய்விளையாட
என்றைக்குத்தானமையு மேந்நளேசொல்லுமென்றாள்
நாளைக்கிழமைக்கு நான்வருவேனென்றுசொன்னான்
நாளைப்பொழுதில் நலமாகக்காண்பீர்காண்
அப்பாலேயென்னை யார்பார்க்கப்போகிறார்கள்
என்னைத்தவிர எவளுனக்குமாகாதோ
தேசத்தில்வேறொருபெண் சிக்காதோமன்னவனே
மண்டலத்தில்நான்தானோ மற்றொருபெண்கிட்டாதோ
என்குறிஞ்சிக்கோட்டைக்கு ளிதமாகவந்தீரென்றாள்
கோட்டைக்குறிகாரர் கொத்தளத்துச்சேவகரும்

மன்னவரேயுந்தனுக்கு வழிவிடத்தான்போருரோ
பத்துத்தலைவாசலுக்குப் பத்துலட்சங்கோடிமன்னர்
தொட்டியர்கள்காவல் துடுக்காயிருக்குமங்கே
வந்தாலு முமமை வலுமையுள்ள தொட்டியர்கள்
கள்ளனென்றுபிடித்துக் கைகாலைவாங்கிடுவார்
உயிர்க்கழுவில்போட்டு உன்தலையைவெட்டிவைப்பார்
இத்தப்படிகாவல் ஏத்தமுள்ளதொட்டியர்கள்
பொல்லாதவண்டன் போக்கிரிகாளென்தகப்பன்
இப்படியெல்லாமிகழ்ச்சியாய்ச்சொன்னேனென்று
மன்னவனே நீர்தானும் மனவருத்தங்கொள்ளாதே
நடக்கும்வழிவகைகள் நானறிந்துசொன்னேன்காண்
என்னையுமறவாமல் ஈடேற்றவே ணுமென்ருள்
புண்ணியனேயும்மைவிட்டுப் பொருத்தேனறைநாழி
என்றுசொல்லிப்பொம்மியரும் ஏங்கிமுகம்வாடி
என்னையும்விட்டு நீ ரிருப்பீரோபூமியிலே
மன்னவரேயும்மைவிட்டு மண்மேலிருக்கேனென்று
கண்ணீரும்விட்டழுது கலங்கினுள்பொம்மியரும்
அதுகண்டுவீரையனுமழவேண்டாம்பெண்ணேயென்று
கண்ணீரைத்துடைத்து காவலனுமேதுசொல்வான்
உன்னைதான்கொண்டு ஊர்வழியேபோவனடி
இருவரும்போய்ப்பிழைப்போம் ஏகமுள்ளபெண்ணாசே
தேறுதலைச்சொல்லி தென்னவனுந்தானடந்தான்
அந்தநல்லவேளையிலே ஆனதொருமாதிகனும்
மைந்தனைத்தான்பார்த்துமாதிகனுமப்போது
முப்பதுநாளும் முடிந்ததுஇன்றையுடன்
ஆகையினலிப்போது ஆனதொருபொம்மியற்கு
காலுக்கிசைந்ததொரு கனத்தமிதியடியும்
மைந்தனேயுன்கையால் வளமாகச்செய்வதற்கு
மிதியடிக்கானதொரு வேணதொருரத்தினங்கள்
தங்கத்தால்சரிகைகளுந் தனிவயிரமுத்துகளும்
பொம்மண நாயக்கர் புதல்விக்குவேணுமென்று
மிதியடியைத்தைக்க விரைவாகயெலஙகையில்
தந்தார்காண்ரத்தினத்தை தயவாக நீயெடுத்து
வாருகள்மேலே வகையாய்த்தானமைத்து
திட்டமுடன்கட்டி சீராகவையுமைந்தா

அந்தச்சொற்கேட்டு ஆணிமுத்துவீரையனும்
சந்தோஷங்கொண்டு தானெழுந்தன்னேரம்
குட்டியாட்டுத்தோலை கொற்றவனுந்தானெடுத்து
அட்டைக்குவளமான அட்டையுந்தான்சேர்த்து
அதற்கேற்றமேல்வாறு அடைவாகத்தானறுத்து
ஒருநாழிகைக்குள்ளே யுச்சிதமாய்மிதியடியும்
கட்டியங்கேதானெடுத்து காரணனுமப்போது
தகப்பன்தனையழைத்து தான்கொடுத்தான்வீரனுமே
பார்த்துமனமகிழ்ந்து பாலகனைக்கொண்டாடி
மாதிகனும்வாங்கி மனமகிழ்ந்துவைத்திருந்தான்

பொம்மியம்மாளை வீட்டிற்கழைத்துக்கொள்ளல்

---

முப்பதுநாளும் முடிந்ததுகாணப்போது
பொழுதுவிடிந்தபின்பு பொம்மணநாய்க்கனுமே
பொம்மியம்மாளுக்குப் பொருந்திச்சடங்குசெய்ய
கூட்டத்துடனே குடிசைக்குத்தான்வந்து
குடிசைபிடுங்கிக் கொளுத்திவிட்டபிற்பாடு
பொம்மியம்மாள்தன்னை பொங்கமுடன் நீராடி
கூறையுடுத்திகோர்வைப்பணிபூட்டி
கொப்பிட்டுவொளியிட்டு குந்தளப்பொன்வோலையிட்டு
கருங்குருவிவாலதுபோல் கண்ணிற்குமையெழுதி
நெற்றியிற்றிலகமதை நேராகத்தானுமிட்டு
உட்கழுத்துத்தாலி யுயர்த்தியுள்ளகல்லிழைத்து
கட்டுவர்க்கந்தன்னுலே கழுத்தில்சரமணிந்து
மோகனமாலை முத்தாபரணமின்ன
மார்பில்பதக்கம் வகையுடனேதானணிந்து
கடகஞ்சரிபவளம் கைவளையல்தானணிந்து
பத்துவிரலுக்கும் பசும்பொன்னுல்காலாழி
இடுப்பிலொட்டியாணம் இசைவாகத்தான்பூட்டி
காலாழிபீலாழி கணைத்தசிலம்பணிந்து
பாடகம்தண்டை பாதசாம்பூட்டி
வக்கிதலைசாமான் வயிரத்தால்மார்பதக்கம்
பூணரமெல்லாம் பூட்டியலங்கரித்தார்
அந்தநல்லவேளையிலே யானதொருமாதிகனும்
மிதியடியைத்தானெடுத்து விரைவாகக்கொண்டுவந்தார்

அந்தநல்லபொம்மணனும் அன்பாகமிதியடியை
பொம்மியம்மாளுக்கு புகழ்ச்சிய ய்த்தான்கொடுத்தான்
மிதியடியைத்தானெடுத்து விரைவாகக்கொண்டுவந்தாள்
மதுரைவேலையென்று மனங்குளிர்ந்தாளப்போது
தாட்டியத்துச்சக்கிலியர் துருசாகக்கொம்பூத
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
எருதுமேல்நகரா எட்டுத்திசையதிர
புல்லாங்குழலூதப் பேரிகையடித்துவர
நாகசுரமேளம் நாட்டியக்களாடிவர
பதினெட்டுமேளம் பாங்குடனேவாசித்து
வெடிசத்தமெங்கும் வேணபடியதிர
கட்டியாகவெச்சரிக்க கைகட்டியாடிவர
வாராளாம்பொம்மியம்மாள் வர்ணமணிமாளிகைக்கு
ஆலாத்திசுற்றும்பெண்கள் அன்னம்போல்நடந்துவர
பொம்மியம்மாள்தனக்குப் பொருந்திதிருஷ்டிகழிக்க
முத்தாலேஆலாத்தி மூவாயிரங்கோடி
மாணிக்கஆலாத்தி வகைவகையாய்த்தானெடுத்து
திருஷ்டிகழித்தார்கள் தீங்கெல்லாம்விட்டோட
கட்டியங்கூறக் கவரிபணிவீச
மங்கைநல்லாள்பொம்மி மாளிகையினுட்புகுந்தாள்
அந்நேரவேளையிலே யானதொருபொம்மணனும்
தையநல்லாளுக்குச் சடங்குசெய்யவேணுமென்று
வேதப்பிராமணரை விதியுடனேதானழைத்து
நல்லதினந்தானுமென்று நன்றாகப்பாருமென்றார்
சித்திரைமாதஞ் சிறந்தசிங்காதனத்தில்
நல்லவேளையென்று நாலுபக்கங்கால்நாட்டி
சந்தனக்கையால் சதுர்முகக்கால்நாட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்விரைபரப்பி
செண்பகப்பூவருயபால் சிறக்கவேமாலைகட்டி
மெல்லிநல்லாள்தானிருக்கமேல்கட்டுத்தொங்கலிட்டு
பச்சைக்கிளியும் பசும்பொன்கலசமிட்டு
தூணுக்குத்தூணு தூங்காவிளக்கேறிய
குத்துவிளக்கேறிய குடவிளக்குநின்றெறிய
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
ஏக்காளமூத எங்குங்கிடுகிடென

பாளையப்பட்டி லுள்ள பரிசனங்களத்தனையும்
துரைகள் துரைமார்கள் துரைராஜமன்னவரும்
மங்கிலியப்பெண்கள் மங்கையர்கள்கூட்டமுடன்
வந்தவுறன்முறைக்கு வரிசையாய்பொம்மணனும்
மாணிக்கமணவரையில் மங்கைதனைகூட்டிவந்து
வச்சிரக்கால்முக்காலி வரிசையாய்தான்போட்டு
பொம்மியரைக்கொண்டுவந்து பொங்கமுடனிருத்தி
சாஸ்திஞ்ரஞ்சொன்னபடி சதுராகத்தான்முடித்து
அன்னையாம்பொம்மிதனை யரண்மனைகொண்டுவந்து
வந்தவுறல்முறைக்கு வரிசையாய்பொம்மணனும்
சந்தனக்கலதூரி தான்பூசியெல்லோர்க்கும்
பரிவுடனே தானும் பாக்கிலையுந்தான்கொடுத்தான்

விருந்திடல்

விருந்தங்களித்தார்கள் விகசிதமாய்தொட்டியற்கு
ஆயிரங்கலசம்பாவரிசி அன்பாகதான்வடித்து
பதின்கலப்பருப்பு பாங்குடனேதானசமைத்து
வாழக்காய்பொரியல்வழுதலங்காய்புளிசமயல்
பச்சடியிற்நூறுவகை பார்குழம்புந்தான்சமைத்து
மோர்க்குழம்புஆமவடை முருங்கப்பூகூட்டமுது
கீரையில்பத்துவிதம் கிரமமாய்தான்சமைத்து
பலவகைபதார்த்தங்கள் பண்பாகதான்சமைத்து
அதிரசம்பேணி அதிகமாகச்செய்து
போளிசுகியம் பொங்கமுடன்செய்து
லட்டுசிலேப்பி லட்சணமாகசமைத்து
காராசேவுபூந்தி கனத்தகற்கண்டுடனே
சர்க்கரையினுல்பதுமை சாங்கமுடன்தான்செய்து
வடையப்பளமும் வகைவகையாய்த்தான்செய்து
இட்டலிதோசை யினிப்புள்னகாரமுடன்
அன்பாகத்தான்செய்து அளவில்பலகாரமுடன்
வாழைப்பலாக்கனியும்வண்மையுள்ளமாங்கனியும்
தேனுடனேசற்கரையும் தெவிட்டவேதான்போட்டு
புத்துருக்குநெய்யும் பொங்கமுடனதான்வார்த்து
பால்விட்டபாயாசமும் பத்துவிதம்தான்செய்து
இத்துடனேகூட ஏற்றகறிவகைகள்
வேணபடிசெய்து விதவிதமாய்த்தான்சமைத்து

பந்திபறிமாரி பாங்காகவிசாரித்து
உறன்முறையோரெல்லாரும் உண்டபெயாரி
கைகாலலம்பிக் கனிவாயைக்கொப்பளித்து
வந்துவுட்கார்ந்தார்கள் வண்மையுள்ளபந்தலிலே
சந்தனமும்புட்பமுந் தபவாயமழங்கரித்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகவேயளித்தார்
வால்மிளகுஏலக்காய் வண்மையுள்ளசாதிக்காய்
ஜாதிபத்திரிகிராம்புடனே சம்பிரமாய்த்தான்கொடுத்து
அருகிலிருந்து அனைவரையும்பூசித்தார்
இப்படியவர்க ளிருக்குமந்தவேளையிலே
மாதிகச்சின்னானும் வண்மையுள்ளவீரனுமே
சாதங்கரிவாங்கத் தான்வாரானன்னேரம்
பொம்மண நாய்க்கரும் பொறுமையுடனேபார்த்து
ஆரடிதாதிகளே அன்னம்படையுமென்றார்
படையுமென்றசத்தம் பைங்கிளியாள்தான்கேட்டு
ஆரென்றுசொல்லி அலண்டுயெழுந்திருந்தாள்
தாதியருமப்போது சக்கிலியனென்றுசொன்னார்
சாதங்கரியுடனே தட்டில்பரிமாறி
கொண்டுவாவென்று கூறலுற்றாளப்போது
தாதியரும்முன்னடக்க தையலருங்கூடவந்து
மாதிகர்க்குப்பெண்ணரசி வாரியமுதிட்டாள்
மதுரை நல்லவீரயனை மங்கையருந்தான்பார்த்தவள்
நல்லதென்றுசொல்லி நலமாயெழுந்திருந்தாள்
தகப்பனுடன்கூடத் தன்மனைக்குப்போய்ச்சேர்ந்து
நடுராத்திரிவீரையனும் நல்லணங்கைதானினைந்து
மைந்தனென்றுவளர்த்த மாதிகற்குங்கூறாமல்
பதினைந்துநாளிகையில் பள்ளியறையைவிட்டு
சாவாபரணமெலாந் தானணிந்தனாப்போது
மாளிகையைவிட்டு வாருன்காணுவலுடன்
பொம்மிமேலாசைகொண்டு புறப்பட்டான்வீரனுமே
கொள்ளைகொண்டவீரனுமே கோட்டைக்குமுன்வந்து
அனுமார்லகுவெடுத்து அதிரக்குதித்தான்காண்
பத்துக்கட்டுவாசலையும் பாங்காகத்தான்கடந்து
பொம்மியற்குகாவலாய் பொம்மணனுமப்போது
தலைவாசல்முன்னே சப்ரமஞ்சக்கட்டிலின்மேல்

உருவினகத்தியுட னுறங்கினன்பொம்மணனும்
இத்தனைகட்டுதிட்ட மிருந்துநம்மையென்னசெய்வான்
என்றுசொல்லித்தான்சிரித்து ஏற்றமுள்ளவீரையனும்
ஈயைப்போல்வடிவெடுத்து இரப்பிலேபோய் நுழைந்தா
மெள்ள நுழைந்துபோய் மெல்லியரைத்தானெழுப்ப [ன்
தேன்மொழியாள்பொம்மி திடுக்கென்றெழுந்திருந்து
கணவரைக்கண்டவுடன் கண்ணியரும்பூரித்தாள்
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
இருவருந்தான்தழுவி யிருந்தார்கள்பஞ்சணையில்
தென்மதுரைவீரையனைத் தேன்மொழியுந்தான்பார்த்து
அங்கங்கேகாவல் ஆனதொருசேவகரும்
தொட்டியர்கள்காவல் துடுக்கர்தங்காவலங்கே
மாளிகைவாசலிலே மன்னனுமென்தகப்பன்
உருவினகததியுடன் உன்மாமன்தானிருக்க
கோட்டைதலைவாசல் கொத்தலமுந்தான்கடந்து
இந்தநல்லகாவலிலே எப்படி நீர்வந்தீரென்றாள்
கேளடிபெண்மயிலே கிரீடிக்கிறதற்காக
ஏந்திழையேயுன்னைவிட்டுஇருககேனரைநாழி
அரண்மனையில் நீயிருந்து அவ்விடத்தில் நானிருந்தால்
ஏகாந்தமெங்கயடி யிருவருக்கும்பெண்ணரசே
ஆகையினாலே ஆரணங்கேயுனைநினைத்து
கட்டுடன்காவல் கடத்துவந்தேனென்சமர்த்தால்

மதுரைவீரனும் பொம்மியம்மாளும்

திருச்சினப்பள்ளிக்குப் புறப்படல்

---

வாருமடிபெண்ணே வையகத்திற்போய்ப்பிழைப்போம்
தெற்கேயொருகோட்டை திருச்சினப்பள்ளியென்று
இருக்குதடிபெண்மயிலே இருவரும்போவோமென்றான்
நல்லதென்றுசொல்லி நலமுள்ளமங்கையரும்
மாணிக்கபெட்டியை வகையுடனேதான்திறந்து
சிலவுக்கோராயிரம்பொன் சீக்கிரமாய்த்தானெடுத்து
ஒற்றைககால்கூடாரம் உத்தமனுந்தானெடுத்து
அத்தனையுந்தானெடுத்து ஆரணங்குமன்னவனும்
போகவேணுமென்றுசொல்லி புறப்பட்டாரிருவருமாய்
கதவைத்திறந்தவுடன் கன்னிகையுங்காளையரும்

மாளிகையைவிட்டுதலே வாசலிலேவத்துநின்று
திறந்தகதவை சேரவேதான்மூடி
காளிதனையழைத்துக் காவலிருக்கச்செய்து
தாப்பாளும்பூட்டும் தப்பாமல்பூட்டிவிட்டு
என்றுசொல்லிமதுரை யிதமாக நீரெடுத்து
மந்திரித்துப்போட்டு மன்னவனுமப்போது
பொம்மணனேறும் புரவிதனையழைத்து
தங்கக்கடிவாளந்தாராளமாய்ப்பூட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்னுல்சீனிகட்டி
கூடாரததைமடித்து குதிரையின்மேல்போட்டு
பட்டாபெரியகத்தி பாங்குடனேதானெடுத்து
பொன்புரவிமேலே பொம்மியரைத்தூக்கிவைத்து
கடிவாளங்கைப்பிடித்துக் காரணனுமேறலுற்றான்
கோட்டைகடந்து கொள்ளைகொண்டான்மதுரையனும்
கொல்லிமலைகடந்து கோனேரியாறுவிட்டு
ஆமூர்வழியாக ஆற்றில்வந்துதானிரங்கி
நாட்டினுன்கூடாரம் நட்டாற்றில்மதுரையனும்
பலகாரஞ்சாப்பிட்டு பள்ளிகொண்டாரிருவருமாய்
ஏகாந்தம்பேசி யிருக்குமந்தவேளையிலே
பொழுதுவிடிந்தது பொம்மணனுமப்போது
பட்டத்துபுரவியையும் பட்டத்துக்கத்தியையும்
காணாததினாலே கலக்கமுற்றுஅந்நேரம்
பொம்மியம்மாளைப்புகழ்ச்சியாய்கூப்பிட்டு
பேசவில்லையென்று பேர்த்தெரிந்தாளக்கதவை
பார்த்துமகளில்லையென்று பதறிவிழுந்தான்காண்
பொம்மியரைக்காணமென்று புலம்பிவெளியில்வந்து
வேதியர்சொன்னதெல்லாம் மெய்யாச்சுதென்று
பட்டணத்திலுள்ள பரிசனங்களத்தனையும்
திக்குத்திசைகளெல்லாந் தேடித்திரிகையிலே
மாதிகச்கின்னனும் மகனையுங்காணேனென்று
எதிராகவந்தான்காண் எண்ணமற்றசக்கிலியன்
எல்லோரும்பார்க்க எடுத்துரைத்தானன்னேரம்
மாதிகன்மகனும் மங்கையரைக்கொண்டுசென்றான்
என்றுசொல்லிநாய்க்கருக் கெடுத்துரைத்தானன்னேரம்

39



மதுரைவீரனும் பொம்மியம்மாளும் திருச்சிறுப்பள்ளிக்குப் பிரப்பட்டல்

## மதுரைவீரன்மேல் பொம்மணன் படையெடுத்தல்.

சேனைகளைக்கூட்டி திரளாகப்போவதற்கு
பதினாயிரம்வெடிகாரர் பாங்குடனேகூட்டமிட்டார்
வளைதடிசக்கரங்கள் வகையுள்ளராணுவங்கள்
சேனைகளெல்லாந் திரளாகத்தான்கூட்டி
அந்தநல்லவேளையிலே ஆனதொருபொம்மணனும்
வாகுவளையமும் வளைதடிசக்கரமும்
எறியம்புநெறியம்புயீட்டியுங்கைப்பிடித்து
பஞ்சகல்யாணிப்புரவி பாங்காகக்கொண்டுவந்தார்
பொம்மணநாயக்கன் புரவிதனிலேறி
தலையாரிமுன்போகத் தனிப்பரியும்பின்றுடர்ந்து
சேனைவருவதினால் செந்தூள் பறக்குதங்கே
தப்பட்டைகொம்பு தவில்முரசுதான்முழங்க
யானையின்மேல்பேரிகை யதிர்ந்துமுழங்கிவர
வழியிலெதிராக வருவோரைக்கேட்கலுற்றார்
ஒற்றைக்குதிரை ஒருபெண்ணுமாண்பிள்ளையை
கண்டீரோதம்பியரே கண்மணியே யிவ்வயில்
(அப்போது) ஆயர்குலத்தோன் ஆடுமேய்ப்போனேதுரை [பாங்
வாருமையாசுவாமி வந்தவகைசொல்லுகிறேன்
கருங்கால்வழியாக கண்டேனொருகுதிரை
குதிரையின்மேலேயொரு கோதைய்ருமன்னவனும்
இவர்களிருபேரும் இதமாகப்போகிறார்கள்
அந்தநல்லசேதிகளை அடைவாகத்தான்கேட்டு
பொம்மணனுமப்போது போகிறான்வேகமுடன்
கருந்தூளுஞ்செந்தூளுங் கலந்துபறக்குதப்போ
காவேரியாற்றில் கணடானேகூடாரம்
அதிலிறங்கிச்சேனை அலைகொட்டிருக்கிறதை
கூடாரத்திலிருந்த கோதையருமெளியில்வந்து
வடக்கிமுகம்பார்த்தாள் வருகின்றசேனையைத்தான்
அலறியேபோய்விழுந்தாள் ஆணிமுத்துவீரையன்மேல்
என்னடிபெண்ணேயென்று எழுந்துவெளியில்வந்து
பார்த்தான்வடக்குமுகம் பாந்துவருஞ்சேனைதன்னை
கூடாரத்தின்மேல் கொள்ளைகொள்ளையென்றுசொல்லி

வந்துநிறைந்தார்கள் வந்தசேனையத்தனையும்
பதினாயிரம்பேர்கள் பாங்குடனே அம்புதொட்டு
கூவியதுபோல் கொடியம்புதான்றொடுத்து
வெட்டவேணுமென்று வீரையன்மேல்வாரார்கள்

மதுரைவீரன் சண்டைக்குப் போகுதல்

—:*:—

கண்டுமந்தவீரையனுங் கடுங்கோபந்தானுகி
மீசைதுடிக்குதப்போ வெகுகோபங்கொள்ளுதப்போ
ஏறினான்குதிரையின்மேல் எடுத்தான்பெரியகத்தி
மன்னவனேயுங்கள் மாமனொருத்தனையும்
வெட்டாமல்விட்டுவிட வேணுமென்றுதெண்டனிட்டார்
பைங்கிளியேபெண்மயிலே படுகளத்தில்ஒப்பாரி [ள்
உண்டாயித்தேசத்தி லுண்மையைச்சொல்லவந்தாய்
என்றுசொல்லிமதுரையனும் எதிராளிசேனையிலே
யானைத்திரளதனில் யாளிவந்துபாய்ந்ததுபோல்
சேனைத்தலத்தில் சிறுவேங்கைபாய்ந்ததுபோல்
வந்துவளைத்தானும் மட்டற்றசேனைகளை
சேனைகளெல்லாந் திரளாகவோடியங்கே
மாண்டுமடிகிறது மன்னனதுசேனையெல்லாம்
மூன்வீச்சுக்காயிரம்பேர் மூணவீச்சுக்காயிரம்பேர்
இறந்துமடியிதப்போ எண்ணிறந்தசேனையெல்லாம்
பொம்மியால்நம்முயிர்தான் போகுதென்றுசொல்லுவார்
என்றுபுலம்பி இறந்துமடியுதப்போ [கள்
புஷ்பமாய்வந்து பொழியுதுகாணுண்டவன்
தொடர்ந்துபோய்வீரன் துடுக்கர்படையையெல்லாம்
துண்டுதுண்டாகத் துணித்தாராமப்போது
சாகிப்சலாமென்று தான்விழுந்தார்கோடிபடை
திரிசிராப்பள்ளிதேசத்தையாளுகின்ற
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனதுராணுகளும்
கோட்டைகதவடைத்து கொத்தளத்தின்மேலிருந்து
வேடிக்கைபார்க்கிறார்கள் வேந்தன்படைத்தளமும்
சேனைதளங்களெல்லாஞ் சேதமாய்ப்போச்சுதென்று
மனதுகலங்கியப்போ மன்னவனுமேதுசொல்வான்
சக்கிலியன்தானுமிப்போ தலையறுத்தான்சேனைகளை
கூட்டப்படைகளெல்லாம் கொன்றுகருவறுத்தான்

நாம்போய்விழுந்து நறுக்குவோம்சக்கிலியை
என்று நினைத்து ஏற்றமுள்ளபொம்மணனும்
புரவிதனிலேறிப் புறப்பட்டானப்போது
எதிர்கொண்டுவந்த என்னமற்றமாமனைத்தான்
பார்த்தங்கேபற்கடித்து பதறிப்போய்த்தான்விழுந்து
மாமனென்றுபாராமல் வாளாலேவீசிவிட்டான்
மாமன்விழுந்தபின்பு மதுரைமகாமுனியும்
தொட்டியப்பயல்களைத்தான துரத்திக்கருவறுத்தான்
கத்திபரிசையெல்லாம் காவேரியிற்றானலம்பி
கொள்ளைசொண்டவீரையனுங் கூடாரந்தானோக்கி
குலுங்கநடைநடந்து குஞ்சிரிப்புக்கொண்டுவந்து
அடுத்தாரைக்கார்க்கும் ஆணிமுத்துவீரையனும்
வர்னமணிக்கூடாரம் வந்திருக்கும்வேளையிலே
ஏந்திழையுமப்போது என்தகப்பனெங்கேயென்றாள்
உன்தகப்பன்தானும் ஒக்கமடிந்தாண்டி
என்றுசொல்லக்கேட்டு ஏற்றமுள்ளபொம்மியரும்
அலரியேபோய்விழுந்தாள் ஆனதொருபடுகளத்தில்
பொம்மணன்மேல்விழுந்து புலம்பியழுகலுற்றாள்
என்னாலேஉங்களுயிர் எமலோகம்சேர்ந்ததோ
பாவிமகளாலே படுகளத்தில்மடிந்தீரோ
என்னைவிட்டுநீங்கள் இருந்தரசுசெய்யாமல்
சேனைதளத்துடனே சீக்கிரமாயாற்றில்வந்து
மடிந்தீரோமன்னர்களே மகாசேனையத்தனையும்
என்றுபுலம்பி ஏங்கியழுகலுற்றாள்
மங்கையரைத்தானெடுத்து மார்புடனேதானணைத்து
அழுகிறதைத்தானமர்த்தி அன்னேரம்வீரையனும்
திருச்சினப்பள்ளியிற்போய் சீக்கிரமாய்கட்டைகொண்டு
சந்தனக்கட்டையின்மேல் சதுராயெடுத்துவைத்து
நீர்க்கடனுந்தீர்க்கடனும் நீதியுள்ளமாமனுக்கு
வரிசையுடனேமுடித்து வள்ளியிலும்வீரனுந்தான்
காவேரிதீர்த்தத்தில் கனமாகத்தான்குளித்து
மங்கையரும்வீரையனும் வந்தார்கள்கூடாரம்
சாதங்கறிவகைகள் சமைத்தாரேயன்னேரம்
படைத்தசாதத்தை பரிவாகவீரனுண்டான்
பைங்கிளியைப்பார்த்துப் பரியாரும்பெண்ணேயென்றான்

உண்டுபசியாறி உத்தமியாள்பொம்மியரும்
இருவருங்கூடி ஏகாந்தமாயிருந்து
பாக்கிலைதாமருந்திப் பரிந்துவிளையாடி
என்னடிபொம்மியேநாம் இங்கிருக்கக்காரணமேன்
கூடாரந்தான்பிடுங்கி கோட்டைக்குச்சேர்வோமென்று
பொம்மியரும்வீரனுந்தான் புரவிதனில்யேரி
திருச்சினாப்பள்ளிக்குச் சீக்கிரமாய்போகையிலே

மதுரைவீரன் விஜயரங்கனிடத்தில் சம்பளத்து
க்குபோயிருத்தல்

---

கோட்டைத்தலைவாசல் குறிகாரர்தாமரித்து
எந்தவூரென்று இதமாகத்தான்கேட்டார்
வடக்கேயிருந்து வருகிறேமென்றுசொல்லி
சேவகமில்லாமல் செம்மையாய் இங்குவந்தோம்
நல்லதென்றுசொல்லி ராஜர்க்கரிக்கையிட
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனதுகேட்டு
வந்ததொருசேவகனை வாசல்தடையில்லாமல்
கூட்டியிங்கேவாருமென்று கொப்பனவேயுரைத்தார்
வீரனதைக்கேட்டு விருப்பமுடனே நடந்தான்
பொம்மியர்க்குத்தான்விடுதி பொங்கமுடனேயமர்த்தி
விடுதியில்விட்டு வேந்தனிடந்தான்போனான்
கண்டுதுரைராஜாவுங் காரணனைப்பார்த்து
வாருங்களென்றுசொல்லி வரிசையுடனிருத்தி
எந்தவூரெங்குவந்தீர் எதுவிஷயஞ்சொல்லுமென்றார்
வடதிசையில்நானிருந்து வந்தேனையாவுங்களண்டை
ஆனதொருசேவகத்தை யடைவாகத்தந்தீரானால்
அரண்மனைவாசலிலே அசையாமற்காத்திருப்பேன்
என்றுசொன்னவீரனுக்கு ஏத்தமுள்ளராசாவும்
என்னகாண்சம்பளம் இயம்புமென்றுதான்கேட்க
திங்களுக்கோராயிரம்பொன் திறமாகத்தரவேணும்
நல்லதென்றுசொல்லி நாய்க்கனுஞ்சம்மதித்து
ஆயிரஞ்சேவகற்கு அணித்தலைவனுமாயிரு
உச்சிதமான உடுப்புகள்தான்கொடுத்து
இந்தப்படிவீர னிருக்குமந்தவேளையிலே
யானையின்மேலேறி அலங்கஞ்சுற்றிவருகிறதும்

குதிரையின்மேலேறி கோட்டைசுற்றிவருகிறதும்
ஆருமறியாமல் அரண்மனைக்குப்போகிறதும்
வேடங்கள் பூண்டு வீதிசுற்றிவருகிறதும்
ஸ்ரீரங்கநாதரைச் சேவித்துவருகிறதும்
வேட்டைகளாடி விடுதிவந்துசேர்கிறதும்
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே
விஜயரங்கசொக்கலிங்கவேந்தன் துரைராஜர்மெச்சும்
தேசக்குறிகாரர் தேசுகிருஷ்ணப்பனுந்தான்
பிள்ளைகளில்லையென்று பெருந்தவசுதானிருக்க
மாயனருளாலே வந்துதித்தாள்மங்கையரும்
புத்திரிபிறந்தவுடன் பூரித்துத்தானிருந்து
வேறோரரண்மனையை விசித்திரமாய்க்கட்டிவைத்து
மங்கையந்த அரண்மனையில் மகிழ்வாகத்தானிருந்தாள்
அரண்மனைக்குமுன்பாக ஆணிமுத்துவீரனுந்தான்
வருகிறபோது மருந்துபொடிவாசனையும்
வீசுவதைக்கண்டு வேலணையக்கண்ணாளும்
ஆரென்றுசொல்லி அவளெட்டித்தான்பார்த்தாள்
கன்னியிளமயிலைக் கண்டவுடன்வீரனுமே
ஆகட்டுமென்றுசொல்லி அதட்டியேதானடந்தான்
கண்டாளோவீரன்றனைகளிப்புடனேசொக்கியவள்
மோகித்திருந்து மூத்தையன்மேலிச்சைகொண்டு
அன்னம்விரும்பாமல் அடைக்காயருந்தாமல்
எண்ணங்கொண்டேமிகவும் ஏங்கியவளிருக்க
பொம்மியருமப்போது போசனங்கள்தான்படைக்க
சாப்பிட்டிளைப்பாறித் தனி சிங்கமதுரையனும்
நஞ்சுதின்று நஞ்சறுக்கும் நடுச்சாமவேளையிலே
பகற்காலந்தான்பார்த்த பாவையரைத்தானினைத்து
படுக்கையைவிட்டெழுந்து பாவையரண்மனைக்கு
ஆசாரவாசல் அரண்மனைவாசல்கடத்து
ஏறிமதில்கடந்து யேந்திழையிடத்தில்வந்து
ஏராகவீரனுந்தான் இசைவாகநிற்கையிலே
நாயக்கர்மகள்தானும் நல்லநித்திரைசெய்கையிலே
மதுரைவீரனணிந்த வாடையவள்மேல்வீச
பள்ளிகொண்டுதானிருக்கும் பைங்கிளியாள்தான்பார்த்து

இந்தப்போடாவசனை யேசகாணென்றுசொல்லி
காலையில்கண்ட காரணனும்வந்தானே
யாரென்றுசொல்லியறிந்துவரவேணுமென்று
பஞ்சனைமெத்தைவிட்டு பசுங்கிளியுந்தானெழுந்து
மாணிக்கப்பொற்கதவை மங்கையரும்போய்த்திறந்து
பார்க்குமளவில் பராக்கிரமவீரன் நிற்க
கண்டுமனகிழ்ந்து கன்னிகையுமப்போது
மணவாளன் நிற்கிறதை மங்கையவள்பார்த்து
மயங்கியேதான்விழுந்தாள் மன்னவனுமப்போது
மாணிக்கக்கையாலே மங்கையரைத்தானெடுத்து
கச்சைப்புறமையெடுத்து கன்னியற்குத்தானுமிட
சோகந்தெளிந்து தோகையருங்கூறலுற்றாள்
வாருங்கள்ராஜாவே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லித்தானு மேந்திழையாளருகில்வந்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டான்
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனேதாமருந்தி
சிரித்துவிளையாடித் தேன்மொழியைத்தான்சேர்ந்து
தீராதஆவலெல்லாம் தீர்த்தானபிற்பாடு
மங்கையருமப்போது மகிழ்ச்சியுடன்தானெழுந்து
வீரையர்க்குத்தானும் வேண்டுமென்றபலகாரம்
அதிரசமுந்தேன்குழலும் ஆனசுகிவடையும்
தீவுச்சரக்குத் தேசத்துசாராயம் [வைத்தாள்
அத்தனையுங்கொண்டுவந்து ஆண்டவர்க்குமுன்னே
இத்தனைநேரம் இளைப்புடனே நீரிருந்தீர்
பசியாறுமென்றுசொல்லி பையுங்கிளியுந்தான்கூற
தேன்மதுரைதானுஞ் சீக்கிரமாய்தான்பசிக்க
அடைக்காயும் வெத்திலையும் அன்புடனேதாமருந்தி
வாருமடிபெண்ணே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லிமதுரை ஏந்திழையக்கேட்கலுற்றார்
பெண்மயிலேநானும் போகிறேனரண்மனைக்கி
என்றுசொல்லதானும் எழுந்துநின்றாரப்போது
மன்னன்முகம்நோக்கி மங்கையருமப்போது
எப்போவருவாய் நீ எனக்கறியக்கூறுமென்றாள்
மாதமொருதினந்தான் மங்கையரே நான்வருவேன்
என்றுசொல்லவீரையனும் ஏந்திழையுங்கேட்கலுற்றாள்

பொன்மயிலே தானும் போகிறேனரண்மனைக்கு
என்றுசொல்லிதானும் எழுந்துநின்றாரப்போது
மன்னன்முகம்நோக்கி மங்கையருமோனிவாய்
எப்போதுவருவீர்காணென்று சொல்லிக்கேட்கலுற்றாள்
மாதமொருதினந்தான் மங்கையே நான்வருவேன்
என்று சொல்லிவீரயனும் இதமாய்வெளியில்வந்து
சுத்நாலேயேறி துருசாய்குதித்திறங்கி
ஆணிமுத்துவீரயனும் அசைந்துநடைநடந்து
வருநிருன்பொம்மியோட மாணிக்கமாளிகைக்கு
வீரையன்தானு விடுதிவந்துசேர்ந்தாலும்
பொம்மியருங்கண்டு பொங்கியேகோபங்கொண்டு
இத்தநேரம்மட்டும் எங்போய்வந்தீர்காண்
முறையும்வரிசையில்லே மூர்க்கமுள்ளமன்னவனே
பெண்டுகளைக்கண்டால் பேய்போல்பறக்கிறீர்காண்
பாதகரே நானிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
என்று சொல்லிபொம்மி எடுத்தெரிந்துபேசிப்பின்
ஏங்கிமுகம்வாடி எண்ணிமுகலுற்றாள்
தண்ணிவெறிக்கார தனஞ்சயனுந்தானுமப்போ
இத்தனைச்சலிப்பேண்டி எந்தையேபொம்மியென்று
வாரியெடுத்து மார்போடதானணைத்து
உன்னைவிட்டுநானு மொருவர்பார்த்ததில்லை
பைங்கிளியேயென்று பரவசிவமாய்ச்சொல்லியபின்
மனமுந்தெளிந்தப்போ மங்கையருந்தாமெழுந்து
சாதங்கறிவகைகள் தயவாகத்தான்படைத்தாள்
சாப்பிட்டிளைப்பாறி தக்கோலந்தானருந்தி
சிறுத்தூளிவிளையாடி சிராகத்தானிருந்தார்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனமகாராஜாவின்
கட்டளைப்படிக்குநிதம் காத்திருக்கும்வேளையிலே
மன்னர்துரைராஜனுக்கு மதுரையிலேதானிருந்து
வெள்ளித்தடிக்காரர் வீருனவுத்தரங்கள்
துருசாகதானெடுத்துத் தூதுவர்கலப்போது
ஆசாரவாசல்வந்து அடவுடனேகைதொழுது
உத்தரவைத்தான்கொடுத்தார் உத்தமனுந்தான்வாங்கி
வந்ததொருவுத்தரத்தை வாசித்துபாருமென்றார்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்

வைகைநதியும் வற்ருதபொய்கைகளும்
சொக்கரிடசந்நிதியும் சொர்ணமணிக்கோபுரமும்
மீனுட்சிசந்நிதியும் வெண்முத்தால்கோபுரமும்
புஷ்பவனமும் பொன்தாம்ரைக்குளமும்
இப்படியாயிருக்கும் எண்ணமற்றராச்சியத்தில்
தன்னரசு நாட்டுத் தனிகாட்டுக்கள்ளரெல்லாம்
நாட்டிலுள்ளகள்ளரெல்லாம் நலமாகக்கூட்டமிட்டு
அழகர்தன்கோவிலுக்கு யாரொருவர்போனாலும்
கண்டவிடமெல்லாம் கள்ளர்உபத்திரத்தால்
உழவுநடவுமில்லை உபத்திரவந்தன்னாலே
கொல்லரிடமுடிப்பு கொடுக்கப்பயமாச்சு
இப்படியாகக்கள்ளர் இடக்குகள்செய்கிறார்கள்
என்றுசொல்லிநாயக்க ரெழுதிவிட்டாருத்திரத்தை
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனுந்தான்கேட்டு
சபையிலுள்ளபேரையெல்லாந் தானும்முகம்பார்த்து
ஆர்போவீரென்றே யடைவுடனே கேட்டதற்கு
அப்படிக்கொத்தகள்ளர் அஞ்சாதநாட்டாரை
வெட்டிக்கருவறுத்து விருதுபெற்றுவாரதற்கு
ஒருவராலாகாது உள்ளபடிசொல்லுகிறோம்
ஆயிரம்பொன்சேர்வை யானதோருவீரையனும்
சேனைதளங்கூட்டித் தெற்கேயனுப்பிவைத்தால்
கள்ளர்பற்றுநாட்டையெல்லாங் கடுகவேதானறுத்து
சீக்கிரமாய்த்தான்வருவான் தெள்ளுமணிவீரையனும்
என்றுசொல்லிஎல்லோரும் இதமாயுரைக்கலுற்றார்
அந்தநல்லசேதி யடைவுடனேதான்கேட்டு
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராஜாவும்
வீரயனைத்தானழைத்து வெகுமதிதானகொடுத்து
ஐயாயிரம்சேனைதளம் அடைவுடனேதான்கூட்டி
தந்தார்சிவிகை தான்கொடுத்தார்வீரையற்கு
வெள்ளைக்குடையும் வெண்சாமரமுடனே
பதினெட்டுமேளவாத்தியம் பாங்குடனேதான்கொடுத்து
பஞ்சவர்ணடால்விருது பட்டாவுந்தான்கொடுத்தார்
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தான்கொடுத்து
போய்வாருமென்றுசொல்லி போற்றிவிடைகொடுத்து
அனுக்கிரகம்பெற்றுக்கொண்டு ஆணிமுத்துவீரையனு

ஏறினார்சிவிகையின்மேல் எண்ணமற்றசேனையுடன்
வெள்ளைக்குடைபிடிக்க வெண்சாமரம்வீச
பொம்மியரண்மனைக்குப் பொங்கமுடன்வாரூர்காண்
கன்னியரும்பார்த்துக் களிப்பெய்துகொண்டாடி
என்றுமடையாதவெக்களிப்புத்தானடைந்து
பூரித்துபொம்மியரும் பொங்கமுடன்வீற்றிருந்தாள்
ஆணிமுத்துவீரையனும் அரண்மனையில்வந்திருந்தான்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராசனுந்தான்
உக்கிராணந்தான்திறந்து உத்தமனார்விரையற்கு
சேனைதளத்திற்குஞ் செல்லுமென்றதிரவியமும்
முத்துக்கடுக்கனென்றும் மோகனமாலையொன்றும்
சாலுவைகள்ரெண்டு தார்வேந்தன்தானெடுத்து
கொல்லர்கையிலேகொடுத்து குணமுள்ளவீரனிடம்
கொண்டுவந்தகொல்லர் கொடுத்தார்காண்விரையற்கு
விரையனுமப்போது வெகுவாய்மனங்குளிர்ந்து
கொல்லரையனுப்பிவிட்டுக் குணமுள்ளவிரையனும்
கணக்கரைத்தானழைத்து கடுகவுரைக்கலுற்றார் [றார்
சேனைதளத்துக்கெல்லாஞ் செலவுக்குத்தான்கொடேன்
ஐந்துலக்ஷம்பொன்னெடுத்து அவர்கையிலேகொடுத்து
கணக்கெழுதிவாருமென்று காரணனுமந்நேரம்
சம்பங்கியெண்ணைகொண்டு தலைமுழுகிமயிராற்றி
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்த்தான்முடித்து
சிவாசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
புனுகுஜவ்வாது புண்ணியனும்மேல்பூசி
கண்டவர்கள்தான்மகிழ கஸ்தூரிப்பொட்டுமிட்டு
போசனமண்டபத்தே போய்ப்புகுந்தான்வீரையனும்
சாதங்கறிவகையுந் தான்படைத்தாள்பொம்மியரும்
சாப்பிட்டிளைப்பாறி சரசமுற்றவீரையனும்
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தானருந்தி
வாருமடிபெண்ணே வார்த்தைசொல்லக்கேளுமென்றார்
மதுரையிற்கள்ளர்வந்து வழியிடைக்குபண்ணுகிறார்
என்றுசொல்லிநாய்க்கரிதமுடனேயழைத்து
போய்வாருமென்று போற்றிவிடைகொடுத்தார்
ஆகையினாலே ஆரணங்கே நீதானும்

பயணமதாகிப் புறப்படு நீபைங்கிளியே
என்று சொல்லிவீரையனும் எழுந்திருந்தயந்நேரம்
பொம்மியருங்கூடப் போறுமையுடன்போகலுற்ருள்
சதுரங்கசேனையெனுந் தளங்களனைவோரும்
பயணமதாகப் பார்மீதில்முழக்கமிட்டார்
பல்லக்கின்மேலே பைங்கிளியுந்தானேற
ஏறினர்குதிரையின்மேல் எடுத்தார்பெரியகத்தி
படைக்குநல்லபார்த்தனைப்போல் பரந்தாராந்தென்மது [ரை
மதுரைதிசைநோக்கி மங்கம்மாள்சாலைவழி
ஆனையின்மேல்பேரிகையதிரமுளங்கிவர
குதிரையின்மேல்டங்கா கூடமுழங்கிவர
தம்பட்டங்கொம்பு தவில்முரசுதான்முழங்க
பஞ்சவர்ணடால்விருது பக்கமெல்லாஞ்சூழ்ந்துவர
புண்ணியனார்வீரயற்குப் பூச்சக்ரக்குடைநிழற்ற
இருபுறமும்வெண்சாமரம் யின்பமுடன்வீசிவர
கட்டியங்கள்கூறக் கவிவாணர்பாடிவர
நடந்தகாண்தென்திசையில் நாலுதிக்குந்தானதிர
சேனைவருகிறதும் செந்தூள்பறக்கிறதும்
காடுமலைகடந்து கரியதொருசோலைவிட்டு
சில்லென்றநாடுவிட்டுச் செடிமலையுந்தான்கடந்து
மணப்பாறைவழிதனிலே வந்தடித்தார்கூடாரம்
கூடாரந்தானடித்து கோட்டைசலாதிவிட்டு
வீரையனும்வந்து விடுதியிற்றங்கினபின்
பொம்மியரும்வீரையனும் பொங்கமுடன்தானிருந்தார்
தேசத்திலுள்ள திரள்மன்னரத்தனையும்
பாளையக்காரர் படைமன்னர்வீருமாய்
வீரையனைக்காண வெகுமதியுந்தானெடுத்து
வந்துமேகண்டு வணங்கியேதண்டனிட்டு
ஆரென்றுசொல்லி அன்பாகத்தான்கேட்டார்
பாளையக்காரனென்று பாங்குடனேசொல்லையிலே
எங்குவந்தீரென்று இதமுடனேதான்கேட்க
கள்ளருபத்திரங்கள் நன்மாயிருக்குதென்று
அஞ்சாதிருங்களென்று ஆதரவுசொல்லையிலே
பாளையங்களெல்லாம் பசியாமிறங்கினபின்
மணப்பாரைசுப்பையனு மங்கபதிநாயக்கரும்

77071

O-78GPV, M

விரையனைவந்துகண்டு வேந்தர்களுமப்போது
ஆணிமுத்துவிரையற்கு ஆனதொருராணுவுக்கும்
அரிசிபருப்புடனே ஆனபதார்த்தங்களுடன்
விரையற்கும்பொம்மியற்கும் விருந்துசமைத்தார்கள்
பொம்மியருமதுரையனும் பொங்கமுடன்தான்புசித்து
சாப்பிட்டிளைப்பாரித் தாபபூலந்தாமருந்த
பள்ளிகொண்டாரிருவருமாய்ப் பாங்கானமெத்தையிலே
தங்குல்விடிந்தவுடன் கதிரோனும்வந்துதித்தான்
பயணமென்றுசொல்லிப் பாரசின்னமூதலுற்றார்
தென்றிசையைநோக்கிச் சீக்கிரமாய்வருகையிலே
வேகமாய்வருகிறது விரையன்சேனையென்று
தோராதலக்கையனுந் தும்பிக்கைபூச்சியனும்
இரண்டுதுரைமாரும் ஏற்றமுள்ளராவுடன்
மாம்பூண்டுஞ்சாலையிலே வந்துயெதிரேநின்று
கைகுவித்துதெண்டனிட்டு கட்டளைக்குத்தானிருந்தார்
விரையனுமப்போ விரைவாகத்தானழைத்தார்
எங்குயிறங்கலா மென்றுசொல்லித்தானழைத்தார்
அடியேன்களுங்க ளறிந்தமட்டுஞ்சொல்லுகிறோம
துவரங்குறிச்சிக்குத் துருசாகப்போய்ச்சேர்ந்தால்
தண்ணீர்செளக்கியமுஞ் சாலைநல்லதோப்புகளும்
பேட்டைநல்லசாவடியும பெரியகடைத்தெருவும்
ஊருக்குமேற்கே உயர்ந்தகிராமமுண்டு
பாளையந்தானிறங்கப் பதிவானஇடமுமுண்டு
என்றுசொல்லியப்போது ஏற்றமுடன்தானுரைத்தார்
நல்லதென்றுசொல்லி நடந்தான்காண்விரையனும்
பாளையப்பட்டார் பாதைகொண்டுகாட்டலுற்றார்
சேனைப்படைத்தளமும் தீர்க்கமுள்ளவிரையனும்
துவரங்குரிச்சிக்குத் துருசாகப்போய்ச்சேர்ந்தார்
ஊருக்குமேற்கே வுயர்ந்திருக்குமேட்டின்மேல்
அனுமந்தகூடாரம் அடைவாகத்தானடித்தார்
கோட்டைசலாதிவிட்டு கொள்ளைகொண்டவிரையனும்
விடுதியில்தானுமப்போ விருப்பாகத்தானிருந்தார்
அந்தநல்லவேளையிலே ஆனதொருலக்கையனும்
தும்பிக்கைபூச்சியனுந் துரிதமுடன்விரையற்கு
விதவிதமாய்உலுப்பைகள் விபரமாயனுப்பலுற்றார்

நெய்குடமுந்தயிர்க்குடமும் நோரண்பாற்குடமும்
ஆட்டுக்கிடாக்களு மடைவானபன்றிகளும்
கோழியுடன்காய்கறியும் கொள்ளைகொண்டவிரையற்கு
அத்தனையுமாள்பேரி லன்பாயெடுப்பித்து
எடுத்தங்கேசென்றிவற்றை எதிராகத்தான்வைத்து
இலக்கையனும்பூச்சியனும் இசைவாகக்கைதொழுதார்
கூடவேகைதொழுது குணமுள்ளவிரையனும்
வாருமென்றுசொல்லி வரிசையுடனேயழைத்து
இருவர்துரைமக்களுக்கு மின்பமொடுவிரையனும்
ஆளுக்கோர்சாலுவை அன்பாய்ப்பரிசளித்தே
இனிதாயுபசரித்து இருங்களென்றுவார்த்தைசொல்லி
அகங்குளிர்ந்துதுரைமக்க ளமைதியுடனங்கிருந்து
விரையற்கும்பொம்மியற்கும் மேலானவிருந்துசெய்ய
சம்பாவரிசிகொண்டு சமைத்தார்கள்காய்கறிகள்
ஆட்டுக்கறியும் ஆனபலகாரமுடன்
அளவிலாக்கறிகள் அதிகசுவையாய்ச்சமைத்தே
பாவையற்கும்விரையனுக்கும் படைத்தார்களன்னம்பல
உண்டுபசியாறி உட்கார்ந்திளைப்பாறி
தாம்பூலந்தான்தரித்துச் சயனித்தார்பூவணைமேல்
பூச்சையனும்லக்கையனும் பொழுதுவிடியுமட்டும்
கண்ணிமைகாப்பதுபோற்காத்திருந்தார்கடிதாக
அன்பர்வினைபோல் அலகவிருட்கூட்டம்
பச்சையிலைமேற்பரிதியும்வந்துதித்தான்
தூக்கமொழித்துத் திடுக்கென்றெழுந்திருந்து
தந்தந்துதக்கித் தடாகத்தில்நீராடி
சிவாசிவாவென்று திருநீறுக்காப்புமிட்டு
வண்டத்துலுக்கரைப்போல் வடிவுள்ளபாகைகட்டி
அங்கிநிசான்தோட்டு அடைவுடனேகச்சைகட்டி
பதினெட்டுஆயுதமும் பாங்குடனேதான்பிடித்து
கூடாரந்தான்பிடுங்கி கொள்ளைகொண்டவீரனுமே
ஏறினார்வாசியின்மே லெடுத்தார்பெருங்குடையை
பயணம்புறப்பட்டார் பரிவாரகத்தன்னோடு
ஊதினார்சின்னம் உலகமெல்லாந்தானதிர
வீரன்தன்சேனை விரைவாய்வருகுதுகாண்
நத்தத்துலிங்கையனும் நாழிகையிற்றான்கேட்டு

விடுமெழுகி விருப்புடன் கோலமிட்டு
தோரணங்கட்டி சுபலோகந்தானுமிட்டு
விசையற்கும்பொம்மியற்கும் விடுதியலங்கரித்து
விதிகருதிவிதமாகப்பந்தலிட்டு
படியரிசியாவற்றும் பாங்குடனேதான்கொடுத்து
அடிபணிந்துவீரனுக்கு அடைவுடனேதெண்டனிட்டா
கண்டுமகிழ்ந்து களைப்பிரியமுண்டாகி
வாருமென்றுசொல்லி வாஞ்சையுடன்தானழைத்து
மோகனமாலையொன்றும் முத்துக்கடுக்கனொன்றும்
வெகுமதியாய்க்கொடுக்க விசையனுமப்போது
நத்தத்துவிதியிலே தலமாகப்போயிறங்கி
சந்தோஷப்பட்டுத் தனஞ்சயனும்விற்றிருந்தான்
தத்தத்துலிங்கையனும் நல்விருந்துதான்செய்தான்
பொல்லததரித்திரமாம் பின்னிரவுபோனவுடன்
நல்லசம்பத்தென்னும் நறுமலராள்வந்துதிக்கும்
மற்றுநாள்காலையிலே மன்னனெழுந்திருந்து
தந்தசுத்திசெய்துதானணிந்தான்வெண்ணீறு
பாளையத்தையெச்சரித்தான் படைமுரசுதானதிர்ந்து
மதுரையைநோக்கி மனமகிழ்ந்துசெல்கையிலே
சதுரங்கசேனைகளும் சதுராகத்தானடந்து
காடுமலைகடந்து கடியவனங்கடந்து
திருமலைநாய்க்கரிடம் சீமைதனைத்துடர்ந்து
வைகைக்கரையோரம் வந்திறங்கியப்போது
அண்டமுகடதிர அடித்தார்கள்கூடாரம்
பொம்மியருந்தானும் பொங்கமுடவிற்றிருந்தான்
கூடாரம்வந்தபின்பு கோட்டைத்தலையாரி
திருமலைநாய்க்கர்முன் திடீரென்றுஓடிவந்து
வடக்கேயிருந்து வருகுதையாசேனைதளம்
மாற்றான்படையோ மருமன்னர்தன்படையோ
என்றுசொல்லித்தலையாரி இணக்கமாகத்தானின்றான்
திருமலைநாய்க்கரும் சேதிதனைக்கேட்டு
ஆருனாலென்ன ஆகட்டுமென்றுசொல்லி
அருகேபிராமணரை அன்பாகத்தானழைத்து
ஆமென்றுசொல்லி அறிந்துமேள்ளவாருமென்றார்
அப்போதேவேதியரும் ஆண்சிங்கவீரனிடம்

போனார்கள்சேதிதன்னைப் பூராயமாய்த்தெரிந்து
வேதியரைத்தானழைத்து வீரனுஞ்சொல்லலுற்றார்
விஜயரெங்கசொக்கலிங்க வேந்தனென்னையழைத்து
மதுரைக்குச்சென்று வண்டரெனுங்கள்ளர்களை
மடக்கிவாவென்று மதித்துயெனையனுப்ப
ஆகையினாலேஇங்கு அடவுடனே வந்தேனென்றார்
சீக்கிரமாயுத்தரத்தை திருமலைநாயக்கர்முன்
சொன்னார்களந்நேரம் துரைநாய்க்கன் தான்கேட்டு
வீரனுக்குவேண்டும் விடுதியெல்லாமமைத்து
வாசல்பிரதானி வரிசைபெற்றசாம்புவனை
எதிராகப்போய்நின்று ஏந்தலெனும்வீரனைத்தான்
அழைத்துடனெவாருமென்று ஆக்யாபித்தேயனுப்ப
சாம்புவனுமப்போது தார்வேந்தன்சொற்கேட்டு
எழுந்திருந்துவாசியின்மே லேறிப்போனானுடனே
குதிரைபரிவாரங் கோதளம்பின்றொடா
பதினெட்டுமேளம் பண்பாயறைந்துவா
வெள்ளைத்துகில்விசிறி விருதுடனே தானடந்தான்
சேனாதிபதியுடனே சேனைதளம்வருகுதென்று
வீரனுமப்போது வெகுவாய்மனமகிழ்ந்து
ஆனையின்மீதவுதா அழகாகவேயேற்றி
மத்தகஜந்தொட்டு மகாவீரன்பொம்மியரும்
ஏறியுட்கார்ந்து யினிதாய்வழிநடக்க
ஆணிமுத்துவீரனுமே யரண்மனையில்வந்திறங்கி
சம்பங்கியெண்ணெயால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிரைக் குடுமிகட்டசிக்கறுத்து
சிரானநெற்றிதனில் திருநீறுதானணிந்து
கெந்தகஸ்தூரி கீறினார்மார்பதனில்
கட்டுவர்க்கந்தானணிந்து காரணனுமப்போது
அறுசுவையோடன்ன மருந்தியிளைப்பாறி
ஏலம்லவுங்கமுடன் யிளம்வெற்றிலைபாக்கும்
தரித்துவிளையாடிசரச பொம்மியைப்பாத்து
வாருமடிபெண்ணே யொருவார்த்தைசொல்க்கேளுமடி
கள்ளரையடக்கிகொல்ல கட்டளையிட்டாரடி
திருமலைநாய்க்கரதுதரிசனஞ்செய்வதற்கு
போய்வாரேனென்று பொன்பல்லக்கிலேறிப்போய்

திருமலநாய்க்கருந்தான் சிறப்பாய்க்கொலுவிருக்கும்
ஆசாரவாசல்வழி அழகாகத்தான்கடந்து
பல்லக்குவிட்டிறங்கி பாராளும்வீரனுந்தான்
திருமலைநாய்க்கனைத்தான் சேவித்துக்கொண்டுநின்றான்
கூடவேநாய்க்கருந்தான் கும்பிட்டுத்தானெழுந்து
பச்சமிருந்துகொண்டு பண்பாகவார்த்தைசொல்வான்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளரெல்லாம்
மதுரைக்கடைத்தெருவை வந்துமெல்லகொள்ளையிட்டு
தாலிமுதல்சேலையெல்லாந் தாங்கள்பறிப்பதனால்
விஜயரெங்க சொக்கலிங்க வேந்தன் துரைராஜனுக்கு
எழுதிவிட்டபடியே யியற்கையுள்ளராஜனும்ம
உம்மையனுப்பினதால உத்தமனே நீர்வந்தீர்
கள்ளர்தளங்கள் கறுவையறுத்துவாரும்
என்றுநாய்க்கன்சொல்ல இணங்கியேவீரனுமே
பட்சத்தினத்திலே பட்சமில்லாக்கல்லரைத்தான்
வெட்டிககருவறுத்து வெற்றிகொண்டுவாரேனென்றான்
நாய்க்கரதுகேட்டு நன்றாய்மனக்குளிர்ந்து
வீரனுக்குதக்க வெகுமதிகளைக்கொடுத்து
அடைக்காயும்வெற்றிலையுமன்பாகத்தான்கொடுத்து
அரண்மனைக்குப்போவென் றனுப்பினார்வீரனையும்
அரண்மனையில் வீரனுந்தா னடவுடனேவீற்றிருந்தான்
அன்றிரவு நீங்கி ஆதித்தன்வந்துதித்தான்
வீரனெழுந்திருந்து விடியற்க்காலக்கடனை
யெல்லாமுடித்துநக செங்குழலாத்திவந்து
சாப்பிட்டிளைப்பாறிச் சாமிதுரைவீரனுந்தான்
சாயங்காலத்தீ வட்டித் தானபோட்டுக்கொண்டுமவன்
சொக்கரிடசன்னிதிக்குத் தருசாகத்தானேக்கி
தீபாதனவேளைக்குத் தினம்போய்தரிசித்து
வருகிறநாளையிலே மலைத்திருடசெல்லாம
கூட்டமிட்டுவளைதடியை கொண்டுபுறப்பட்டு
மதுரைகடைவீதிவந்து நுழைந்துகொண்டு
காசுபணத்தைக் கனக்கவேகொல்லையிட
பட்டணத்திலுள்ளபரிசனங்களெல்லோரு
கோவென்றசத்தங்கூக்குரலுந்தானுமிட
நகரத்தலையாரி நாட்டமுடனேடிவந்து

வீரனுடனேசொன்னான் வீரனுமப்போது
இணக்கமுள்ளபொம்மியற்கு இதுசேதியைச்சொல்லி
குதிரைமேலேறிக் கூராயுதந்தரித்து
சேனைதளத்துடனே சிறப்பாகவேசென்று
வடக்குநல்லவாசலிலே வகையுடனே தானடந்தான்
நலமுடனேவீரனுமே நடந்தான்காணம்மானை
பொல்லாதவீரனுந்தன் போர்செய்யக்கோபித்து
பட்டாவுருவிக்கொண்டு பதட்டமுள்ளகள்ளரின்மேல்
பாய்ந்தான்குதித்தான் பதிவிருந்து தானழைத்து
வீசினான்கள்ளர்களை வீராதிவீரனுந்தான்
முன்வீச்சுக்காயிரம்பேர் முனைவீச்சுக்காயிரம்பேர்
இந்தப்படிக்கு யிறக்கடித்தான்வீரனுந்தான்
தன்னரசு நாட்டுத் தனிக்காட்டுக்கள்ளர்களும்
கோக்ரிரித்துசேனைதளம் கோடிபடைதான்வந்து
ஈட்டிக்கோலாலே யெறிந்தார்கள்வீரையன்மேல்
கண்கள்சிவந்து கடுங்கோபந்தான்பூண்டு
வாகுநல்லசுமுதாடு வண்மையுடன்றான்பூண்டு
யானைக்கூட்டத்தில் யாளிவந்துபாய்ந்ததுபோல்
பொல்லாதவீரன் பூர்த்தியாய்வீசலுற்றான்
கள்ளர்படைகளெல்லாம் கலங்கியேமெய்மறந்து
மெய்சோர்ந்துவிழுவாரும் விதிவசமோஎன்பாரும்
ஆதிசிவனுக்கு அபயமென்றுவிழுவாரும்
ஈட்டிக்கோல்வைத்தபடி யிறந்துமடிவாரும்
அச்சமற்றக்நாட்டுக் கழிவுவந்துநேர்ந்ததென்றும்
இன்றுமுடிந்ததுகா ணெங்கள்பலமெல்லாம்
கள்ளரெல்லாம்புலம்பி கைசோர்ந்துவிழுந்தார்கள்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
கள்ளர்படைசேனையெல்லாங் கருவறுத்தவீரன்றன்னை
தேவரெல்லாங்கண்டு சிறப்புடனேபார்த்திருந்தார்
நாலுதிசைமெச்சவீரன் நற்கொலுவில்தானிருந்தார்
வெள்ளானைமீதேறி வெற்றிகொண்டுவோரார்காண்
பஞ்சவர்ணடால்விருது பக்கமேசூழ்ந்துவர
நாகசுரமேளம் நாட்டியப்பெண்ணாடிவர
மதுரைதிசைநோக்கி வாரார்காணம்மானை
கள்ளர்பற்றுநாட்டையெல்லாங்கடையாய்ப்பறக்கவிட்டு

சகலசம்பிரமத்துடன் சாமிமுத்துவீரையரும்
வருகிருரென்று வகையுள்ள தூதர்களும்
திருமலைநாய்க்கர்கொலு செய்யுமண்டபத்தில்வந்து
சேதிதனையெல்லாஞ் செப்பலுற்ருரன்னேரம்
சந்தோஷப்பட்டுத்தாதியரைக்கூப்பிட்டார்
தேனுக்ஷிமீனுக்ஷி செண்பகப்பூநாச்சியரே
பச்சைநிறத்தாளே பவளக்கொடியாளே
மாசிலாப்பத்தினியாள் வானத்தருந்துதியாள்
இத்தப்படிக்கு யியல்பான தாதியரும்
ஆயிரந்தாதியரை யன்பாயழைத்துவர
வெற்றிகொள்வீரருக்கு மேல்திருஷ்டிகழிக்க
ஆலாத்திசோடித்து அடைவுடனேதானடந்து
எதிர்கொண்டுபோவென் றெசமானனுப்பவேதான்
அழகாத்தினம்பதித்து ஆலாத்திசோடித்து
ஆணிமுத்துவீரனுக்குஆலாத்திசுத்தினர்கள்
அந்தமுள்ளவெள்ளையின்மே லாசைகொண்டுவீரையன்
யானையைவிட்டிறங்கியரண்மனைக்குள்ளேசென்று(முன்
திருமலைநாய்க்கர்தனைச் சிறப்பாகவந்துகண்டார்
அந்தநல்லநாய்க்கனும் அன்புள்ளவீரனுக்கு
கைலாகுதான்கொடுத்து களிப்புடனேவாவழைத்து
சிங்காதனத்தருகே சிறப்பாயிருக்கவைத்து
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தான்கொடுத்து
கள்ளர்பற்றுநாட்டைக் கருவறுத்துவந்தீரே
உம்மைப்போல்தேசத்தி லொருவரையுங்கண்டதில்லை
இளைப்போடிருக்கின்றீர் சேற்றமுள்ளவீரையனே
காலையிலேநாம்ம கலந்துவசனிப்போம்
என்றுசொல்லிநாய்க்க ரிசைவாகத்தானனுப்ப
நல்லதென்றுவிரையனும். நாய்க்கரைத்தான்றொழுது
அரண்மனைவாசல்விட்டு அடைவாகத்தானடந்து
யானைமேலேறி யாணிமுத்துவிரையனும்
பொம்மியரண்மனைக்குப் பொறுமையுடன்போய்ச்சேர்ந்
கட்டுவர்க்கந்தானவிழ்த்துக் காரணனுமந்நேரம் (து
வெந்நீரினலே விரையனும்ஸ்நானம்செய்து
கோதிமயிராற்றிக் கோணமல்சிக்கறுத்து
வாரிமுடித்து வகையுடனேவேஷ்டிகட்டி



மதுரைவீரசுவாமி பொம்மியம்மாளைச் சிறையெடுத்தது

சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
உண்டுபசியாறி உத்தமனார்விரனுந்தான்
அடைக்காயும் வெற்றிலையு மன்புடனேதாமருந்தி
பஞ்சணைமெத்தையின்மேல் படுத்துயெழுந்தவுடன்
ஆலாத்திப்பெண்களிலே ஆனதொருவெள்ளையின்மேல்
திராதவாசைகொண்டு சீக்கிரமாயெழுந்திருந்து
கட்டுவேர்க்கந்தானுடுத்திக் கனயப்பணிபூண்டு
சீவிநல்லகொண்டையிட்டுச் சிங்காரமாய்நடந்து
கோட்டையின்மேலேறிக் குதித்தான்காணம்மானை
வெள்ளையம்மாள்தன்விடுதி வேகமுடனேக்கியவன்
அங்கையற்கணம்ம னடிபணியும்வெள்ளையம்மாள்
மீனாக்ஷிசன்னிதிக்கு முன்பாகமாளிகையில்
தூக்குமஞ்சக்கட்டில் துலங்கவலங்கரித்து
பஞ்சணைமெத்தையின்மேற் பைங்கிளியாள்வெள்ளையரும்
நினைவுதெரியாமல் நித்திரைசெய்கையிலே
உல்லாசமாக வொயிலழகர் தென்மதுரை
விதிப்பயனையெண்ணமல் மெல்லியர்மேலாசைகொண்டு
மதிலேறித்தான்குதித்து மண்டபமுந்தான்கடந்து
பத்தினியாள்பள்ளிகொண்ட பாரயிடந்தன்னில்வந்து
இருந்துநினைத்தான் எண்ணமற்றகாளையவன்
தட்டியெழுப்பினல் தையலெழுந்திருந்து
கூவென்றால்வெள்ளையருங் கூடிடுவார்மாதரெல்லாம்
என்றுபலவாறு யெண்ணியேயேக்கமுற்று
முருகன்துணையென்று மூர்க்கமுள்ளவிரனுமே
தோளின்மீதிருந்த துப்பட்டிக்கீழ்பரப்பி
மெள்ள அசையாமல் மெல்லியரைத்தூக்கிவைத்து
கட்டியிறுக்கிக் கைலாகுகொண்டுதூக்கி
மாளிகையும்விட்டு மண்டபத்தைத்தான்கடந்து
தானிருக்குங்கோட்டை யிற் றண்டிக்குதிக்கையிலே
வேவுகாரர்கள்ளனென்று விரையனைதரன்பிடித்து
ஆரென்றுசொல்லி அத்தட்டியவர்தான்கேட்டு
பத்தினியைகொண்டுவந்த பாவம்பலித்ததென்று
எங்கிமுகம்வாடி என்னசொல்லப்போறேமென்று
ஒன்றுஞ்சொல்லாமல் ஊமைபோல்தானிருக்க
திருமலைநாய்க்கருக்கு சேதிசொல்லிவாருமென்று

அனுப்பிவைத்தார் தூதவனை ஆனதொருசேவகனும்
தூதவருமப்போது துருசாகத்தானோடி
ஆசாரவாசலதின்று அடைவுடனேசொல்லலுற்றார்
திருமலைநாய்க்கர் சேதிதனை தான்கேட்டு
கள்ளனையிங்குகாணக் கொண்டுவாவென்றுசொல்ல
கட்டளையிட்டபடி காவலர்களோடிவந்து
கள்ளனெனும்வீரனையும் கட்டியமுட்டையுடன்
நாய்க்கர்முன்கொண்டுவந்து நடுநீதிகேட்கலுற்றார்
திருமலைநாய்க்கருந்தான் திருடன்முட்டையைத்திறந்து
பார்க்கும்போதங்கே பாவைவெள்ளம்மையென்று
கண்டவனைத்தானிறுத்தி கள்ளனைக்குற்றத்தினால்
கானகத்தில்கொண்டுபோய்க் கைகாலைவாங்குமென்றார்
காவலருங்கள்ளனைத்தான் காட்டில்கொண்டுபோயவனை
கைகாலைவெட்டிவிட்டுக் காவலாள்வந்துவிட்டார்
வீரனுந்தன்னுடைய விதிதனைத்தானினைத்து
ஆதிசிவன்மாயவற்குஅபயமென்றுதானசொல்லி
எண்ணாததுமெண்ணி இருக்குமந்தவேளையிலே
அப்போதுவெள்ளையரும் அசந்துநித்திரைதெளிந்து
பார்க்கவேவீரன் பக்குவமாப்நின்றிருக்க
கண்டவுடன்யோசித்து காரிழையுஞ்சொல்லுகிறாள்
நாணேபதிவிரதை நன்கையறியாமல்
தொட்டுயெனையெடுத்துத் தூக்கியேவந்ததினால்
இனியெனக்கு நீபுருஷன் என்பதற்கோரையமில்லை
கோவேயினிஉந்தன் கூடவேநான்வருவேன்
உன்துக்கம்என்துக்கம் ஒன்றல்லால்வேறில்லை
ஒற்றுமையாகி உயிரைவிடுவேன்காண்
என்றுதிடமாக இயம்பினாள்வெள்ளையரும்
இவன்சொல்லும்சொற்கேட்டு இருந்தவர்களப்போது
ஆணிமுத்துவீரனென்று அனைவோருந்தாமறிந்து
உம்மைஇன்னானென்று உண்மையறியாமல்
கைகாலறுத்துவிட்ட காரணத்துக்கென்னசெய்வோம்
என்றுசொல்லிசேவகர்கள் இணங்கிவணங்கலுற்றார்
காலில்விழுந்து கதறிவிழுகலுற்றார்
அழுதசத்தந்தான்கேட்டு ஆரணங்குபொம்மியரும்
அவரோஎவரோ அறிந்துவருவோமென்று

அன்னம்போலேநடந்து அருகில்வந்துதானின்று
வீரனைத்தான்பார்த்து விம்மிவிம்மித்தானழுது
பாதகா நானிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
கால்கையறுப்புண்டிருக்கக் காணவோவந்தேனுன்
எழுத்தையறியாமல் எண்ணினேன்கோடிசிந்தை
ஆண்டவீரனேயுந்தனுக்கு அசடுவந்தவாரேது
மன்னவனேயுந்தனையும் வழுமரிப்போருண்டோதான்
என்றுசொல்லிபொம்மியரும் ஏங்கிவிசனமுற்றாள்
புருஷனும்வாய்திறந்து பொம்மிக்குச் சொல்லலுற்றான்
ஆதிசிவன்பிர்ம்மா அன்புள்ளமாயனுமே
கூட்டியெழுதினதைக் குறிப்பாரோபெண்ணரசே
எழுத்தையழிக்க எவரால்முடியுந்தான்
சூரியகுலத்துதித்து தோற்றமுடன்வீற்றிருந்தேன்
மாறுபடாவம்மிசத்தில் வந்துபிறந்தேன்காண்
பொம்மியரேநானும் பூமியிலிருப்பதில்லை
மீனாக்ஷிபொற்பதத்தை விருப்பமுடன்சேர்வதன்றி
அரைநொடியும்நானிருக்க அதிகாரமில்லையடி
ஆரணங்குபொம்மி அருஞ்சேதிதான்கேட்டு
மன்னவனேவுன்னைவிட்டு மண்மேலிருப்பதில்லை
கூடவருவேன்காண் கொள்ளைகொண்டராஜாவே
என்றுசொல்லிபொம்மி இதக்கமாய்த்தானடந்து
வைகைநதியில் வனமயிலாள்ஸ்நானம்பண்ணி
கூந்தலுதறியங்கே கோடாலிமுடிதான்போட்டு
கூறையுடுத்திக் கோலப்பணிபூண்டு
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
எலுமிச்சங்காய்கையில் ஏந்திக்கொண்டுதானடந்து
அம்மாமீனாக்ஷி அடியாருநம்வாரேனம்மா
சிவசிவாசொக்கலிங்கர் சீர்பாதங்காணவென்று
பயணம்பண்ணமென்று பைங்கிளியுந்தானடந்து
வீரரிருக்குமிட வெளியேதான்சேர்ந்தாள்
அந்தவிதமாயிருக்கும் அவ்வேளையிலே
வெள்ளையரும்பார்த்து விதவிதமாய்த்தானினைந்து
என்றொருபெண்ணாலே இடியேறுவீரனுக்கு
சொல்லரியபொல்லாங்கு சுத்தமாய்வந்ததினால்
திருமலைநாயக்கருக்குச் சேதிதனைச் சொல்வோமென்று

வாடியமனதுடனே வந்துநின்றுசொல்லவேதான்
திருமலைநாய்க்கர் சேதிதனைகேட்டு
அருமையுள்ளபிள்ளைக்கி அசடுவந்துநேர்ந்ததென்று
ஆசாரவாசல்மட்டும் ூ லரியேதான்புரண்டு
ஆடைகலைய ஆபரணந்தான்புரள
ஓட்டமாயோடிவந்து உத்தமனைத்தான்பார்த்து
அப்பாமகனேயென்று அலறியேதானழுது
வெள்ளயபரைவேணுமென்று விரும்பியெனைக்கேட்டால்
கோதைமயிலைக் கூட்டிவந்துதாரேனே
எந்தனதுபெண்ணை இஷடமுடன்கேட்டாலும்
கல்யாணந்தான்முடித்துக் கண்ணாலைபாரேனே
நான்தாண்டாவீரனென்று நலமுடனேசொல்லாமல்
பேசாமலிருந்ததினால் பிழைமோசம்வந்ததுகாண்
என்றுசொல்லிநாய்க்கர் ஏங்கிமுகம்வாடி
மீனாட்சிசன்னதிக்கு விருப்பமுடன்சென்றேகி
உத்தரவுதான்கேட்டு ஒருநொடியில்நான்வருவேன்
என்றுசொல்லியப்போது இசைவுடனேபோனார்காண்
சொக்கர்திருவாலயத்தில் துருசாகப்போய்ப்புகுந்து
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
திரிபுரமெரித்தவர்தன் தேவிபரமேஸ்வரியே
வீரனுக்குவந்த விதிப்பயனைத்திருமம்மா
கைகால்வளர்ந்து கடுகவெழுந்திருக்க
வேண்டுமெம்மாதாயே வேதாந்தநாயகியே
என்றுசொல்லநாய்க்கர் ஈஸ்பரியுந்தான்பார்த்து
கால்கையுந்தான்வளரக் கட்டளையுமிட்டாள்காண்
திருமலைநாய்க்கருந் திரும்பிவருவதற்குள்
மீனாட்சிகிருபையினால்வீரனுக்குமுன்போல
கால்கையுந்தான்வளர்ந்து கடுகயெழுந்திருந்து
திருமலைநாய்க்கன்முன்னே சீக்கிரமாயோடிவந்து
வாருமையாராஜாவே வார்த்தை சொல்லக்கேளுமையா
மாறுபடாவம்மிசத்தில் வந்துபிறந்தேன்காண்
மாறுபடாமேனியிலே மாறுபட்வாச்சுதுகாண்
பூவையாலென்னுயிரும் பொன்னுலகம்போகுதையா
அன்றுமெனக்கு ஆயனெழுத்துப்படிமய
வாய்த்ததென்றுவீரன் வண்மையுடனிருக்க

காதினுற்கேட்டு கண்ணீர்விட்டார் நாய்க்கரும்
வாழ்வுஞ்செல்வஞ்செல்வ மாயமிதுராஜாவே
நீரின்மேற்குமிழி நிலமையற்றவாழ்க்கையிது
என்றுமிருந்தாலும் இறப்பதுநிச்சயந்தான்
சலித்துநீர்தானழுக தர்மமோராஜாவே
என்றுசொல்லிவீரனுமே இவ்வண்ணந்தேறிநின்முன்
பெண்களிருவருமே பிரியமாத்தீக்குதிக்க
நற்சவுக்கமாக நலமான தீக்குழியை
உண்டுபண்ணிவைங்க நீ உத்தாரஞ்சொல்லுமையா
திருமலைநாய்க்கருஞ் சேதியிதுவறிந்து
வைகைக்குத்தான்போய் மாந்தோப்புக்குட்புகுந்து
தீக்குழிக்கான செம்மையுள்ளதாவதனை
கண்குறித்துக் கடுகவேவெட்டிவைத்து
சந்தனக்கட்டைகொண்டு சதுராகத்தான்பரப்பி
தீக்குழியைச்சுற்றி ஜெயமங்களஞ்சொல்லி
வேதியரைத்தானழைத்து விதியாகச்செய்யென்றார்
ஆலாத்திசுத்தும்பெண் ணனதொருவெள்ளையரும்
பொன்னனதிருமேனி பொம்மியருங்கூடவேதான்
ஏற்றமுள்ளவீரனுமே இருவரையுந்தானழைத்து
அன்னதானம்சொர்னதானம் அன்பாகச்செய்வித்து
கோதானம்பூதானங் கோதையரால்செய்வித்து
காரிகை நீங்களிருவர் கைலாயஞ்சேருமென்றார்
காதினுல்கேட்டுக் கன்னிகைகளுமப்போ
பூரித்துமேனி பொங்கியிருவருந்தான்
பூண்டிருந்த ஆபரணம் பொரிபொரியப்தான்றெக்க
சந்தோஷமாயிருவர் சாமிமுத்துபாதத்தில்
அடைவுடனேதெண்டனிட்டு அன்பாயிருபேரும்
இருவருந்தெய்வத்தை யிதமாகவேதொழுது
சுத்திவந்துதீக்குழியைச் சுத்தமனதுடனே
சந்தோஷமாகவேதான் சலியாமலேகுதித்தார்
தேவாதிதேவரெல்லாந் திட்டமுடனேபார்த்தே
ஆகாசகந்தருவர் அனைவோரும்பூச்சொரிய
தேவதுந்துமிதானுஞ் சீக்கிரமாய்த்தான்முழங்க
தீக்குழியைவீரனுமே சீக்கிரமாய்த்தான்மூடி
சடங்குகளெல்லாஞ் சதிராகத்தான்முடித்து

ஸ்நானமதுசெய்தபின்பு தயவாய்ப்பிராமணர்க்கு
வஸ்திரங்காசுபணம் வண்மையயாய்த்தான்கொடுத்து
பொற்றாமரைக்குளத்தில் பொறுமையுடன்போயிறங்கி
கோடாலிமுடியவிழ்த்துக் குதித்துமேஸ்நானம்செய்து
சிவசிவாவென்று திருநீறுதானுமிட்டு
சந்தனம்புனுகுஞ் சவ்வாதுடன்கதம்பம்
பூசித்திருமேனியெங்கும் பொங்கமுடன்தானணிந்து
மிதியடியும்பூண்டுமேல் ருத்ராக்ஷந்தாமணித்து
என்தாயெமீனாக்ஷி ஈஸ்வரியேயென்றுசொல்லி
காளைமுத்துவீரனுமே கடுகனவேதான்வந்து
ஆதிசிவனேயென்று அன்புடனேதான்வந்து
மீனாக்ஷிசன்னதிமுன் வீரையனும் வந்துநின்று
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
திருமலைநாய்க்கர்தனை திரும்பிமுகம்பார்த்து
வாருமென்றுசொல்லி வண்மையுடன்தானழைத்து
மீனாக்ஷிபொற்பாதம் விதமுடனேசேர்வதற்கு
உத்தரவுசொல்லுமென்று ஒருவார்த்தைதான்கேட்டு
மனதுக்குகந்தபடி மகிழ்ச்சியுடன்செய்யுமென்றார்
போய்வாரேனென்றுசொல்லப் புகலறியவீரனுமே
பார்வதியின்கோவில் பதினெட்டாம்படியேறி
என்தாயேமீனாக்ஷி எனக்கென்னபுத்தியென்றான்
முந்தியமாலை முதற்பூசையுன்னுதுகாண்
கம்பத்தடியில் காத்திருந்துபூசைகொள்வாய்
என்றுசொல்லமீனாக்ஷி ஏற்கவரங்கொடுத்தாள்
காளைமுத்துவீரனுந்தான் கம்பத்தடியில்வந்து
கன்றறுக்குஞ்சூரிதனைக் கையிலேதான்வாங்கி
பார்வதியேயுந்தன் பாதங்கெதியென்று
கடிகைதவறாமல் கழுத்தையறுத்துக்கொண்டான்
வீரன்சிரசுதான் மீனாக்ஷிபாதம்விழ
அல்லவருங்கூடி ஆச்சரியப்பட்டார்கள்
வீற்றிருந்தசேனையுடன் வேந்தன் திருமலையை
மீனாட்சியம்மனப்போ விடுதிபோய்ச்சேருமென்றாள்
அப்படியேயெல்லோரும் அரண்மனைபோய்ச்சேர்
அன்றுமுதல்மூன்றுநா ளாணிமுத்துவீரனுக்கு
பூஜைநமஸ்காரம் புசிப்புமேதானுமில்லை

பார்த்துமெள்ளவீரனுமே பதறியேகோபங்கண்டு
இப்படிக்குத்தானிருந்தா லேர்க்காதுகலியுகத்திலை
என்றுநினைந்துயெழுந்திருந்தன்னேரம்
மீனாட்சிசந்நதிபோய் விதியுடனேதெண்டனிட்டு
என்தாயேமீனாட்சி யெனக்குபுத்திசொன்னபடி
பட்டணத்திலுள்ளோரும் பராமரிப்பதில்லையெனை
இதுபார்த்துநீயிருந்தா லென்வயிறுபசியாதோ
ஆதலால்பட்டணத்தி லமர்ந்தமனிதர்களை
கொள்ளைகொள்ளவெனக்கு கூறுவையேயானுக்கால்
காவடியுந்தோளேந்திக் கம்பத்தடிவருவேனம்மா
என்றுதான்சொல்ல யீஸ்வரியுந்தான்கேட்டு
கம்பத்தடிவீரா காரியத்தைச்சொல்லுகிறேன்
துணிவுகூறும்வீரா துள்ளாதேயிந்நேரம்
திருமலைநாயக்கர்தன் செம்பொன்மணிமாளிகையில்
உள்ளேநுழைந்து வுபாயமொன்றைச்செய்வாய்நீ
அவ்விடத்திலுள்ளவரை அதட்டிமிகச்சொற்பனத்தை
பண்ணிவந்துபூசை பாங்குடனேவாங்குமென்றாள்
என்தாயேமீனாட்சி யிதுபோதுமென்றுசொல்லி
திருமலைநாயக்கர்தன் செம்பொன்மணிமாளிகையுள்
ஆக்கிரமித்துப்போய் அதட்டிதோடைதட்டி
நஞ்சுதின்றுநஞ்சறுக்கும் நடுச்சாமவேளையிலே
பட்டணத்திலுள்ள பாராமுனிகளெல்லாம்
வண்டத்துரைவீரன் வருகின்றவேளையிலே
எதிரேவரப்பயந்து எல்லோருந்தாமொளிப்பார்
மன்னனரண்மனையில் மதிலேறிவீரன்போய்
சப்பிரமஞ்சக்கூடத்தில் தனித்துச்சயனஞ்செய்யும்
திருமலைநாயக்கர்தனைச் செவ்வையாய்த்தான்பார்த்து
தோட்டிபோலுருக்காட்டி சொர்பனஞ்சாதித்தான்
வேர்த்துவிடுவிடுத்து விழித்துமெள்ளத்தான்பார்த்து
…தரியெழுந்திருந்து பைங்கிளியைத்தானெழுப்பி
…ணதைசொற்பனந்தான் கண்டுபயந்தேனடி
…வுசொல்லக்கேட்டு யியற்கையுள்ளபெண்சாதி
…ந்தாலும் யீஸ்வரியாள்மீனாட்சி
…தந்துணையொழிய புகலுவதற்கேதுமில்லை
…க்குத்தேறுதலை மங்கையருந்தானுரைத்தாள்

சொல்லுகிறவார்த்தையெல்லாந் துரைவீரன்கேட்டிருந்
ஆகட்டுமென்று அரண்மனையைவிட்டுமெள்ள .(து)
கோட்டைதலைவாசல் குதிரைலாயம்புகுந்து
பஞ்சகலியாணி பட்டத்துக்குதிரையும்
அருத்தாரரைநொடியி லாங்காரங்கொண்டவன்காண்
மாட்டுமந்தையிற்புகுந்து மகாபூசைகொண்டவன்காண்
உக்ரமுள்ளசேவகர்கள் ஒருநூறுதலையாரி
படுத்திருக்குஞ்சாவடியில் பாங்குடனேபோய்ப்புகுந்து
சுழற்றியெரிந்தான்காண் சுற்றிமதிற்கப்பாலே
ஆனைகட்டும்லாயத்தில் அஞ்சாமல்வீரன்போய்
மண்டியிட்டுவீரன் மதயானையையடக்கி
கன்னிகைப்பெண்கள் கண்ணுறங்கும்வேளையிலே
கன்னியர்களருகில்வந்து காளைமுத்துவீரனுந்தான்
அபயமென்றசத்தம் அண்டமெல்லாந்தானதிர
காரணனுந்தென்மதுரை கம்பத்சடியில்வந்தான்
அன்றிரவுசென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
காசித்திருமலையர் காலையிலெழுந்திருந்து
கால்கைகள்சுத்திசெய்து கனத்தபணிபூண்டு
கட்டியங்கள்கூறக் கவரிதனைவீச
நாகசுரமேளம் நாட்டியங்களாடிவர
மந்திரிகள்சேனை மகிழ்மன்னர்கூட்டமுடன்
ஆசாரவாசல்விட்டு அரண்மனையுந்தான்கடந்து
சொக்கரதுசந்நதிக்குத் துருசாகவோடிவந்து
அங்கயர்க்கண்மீனாட்சி அம்மனுடசந்நதியில்
மீனாட்சிமுன்பாக வேந்தன்விரைவில்வந்து
முக்கால்வலம்வந்து மூவிரு[illegible]லம தண்டனிட்டு
என்தாயேமீனாட்சி யீஸ்வரியேயிப்போது
காணாதசொர்ப்பனங்கள் கண்டவிதங்களென்ன
அதிசயங்கள்வந்தவகை அடியேனறிவதற்கு
வழியாயுரைக்கவேணும் வாய்மையுள்ளயீஸ்வரியே
பார்வேந்தனப்போது பாதத்திற் தான்விழுந்தான்
வாழ்மதுரைச்சொக்கரும் மதுரைமீனாட்சியரும்
அப்பாமகனே அதிசயங்கள் வந்தவகை
காரணமாய்வந்தகதை கம்பத்தடிவீரன்
பட்டபாடெல்லாம் பாரோர் நினைக்கவில்லை

பொந்திபசிமெத்த பொல்லாவீரனுக்கு
உண்டானதினாலே ஓடிவந்தானுன்மனைக்கு
வீரன்குறையொழிய வேறொன்றுந்தானுமில்லை
பட்டணமெங்கும் பலதெருவார்பூசைசெய்ய
கம்பத்தடியில்வந்து காணிக்கைத்தானும்வைத்து
சந்துக்குச்சந்து தனிபூசைதானுமிட்டு
இந்தப்படிக்கு யிஷ்டமுடனேதொழுதால்
வீரன்குறைதீர்ந்து வெகுவாய்மனங்களிப்பான்
என்றுசொல்லியீஸ்வரியும் யிதமுடனேவாக்குரைக்க
திருமலைநாயக்கர் சீக்கிரத்தில்தானெழுந்து
கம்பத்தடியில்வந்து காளைமுத்துவீரனுக்கு
ஐந்நூறுபொன்கொண்டு அபிஷேகம்பண்ணிவைத்து
மண்டபமுங்கட்டிவைத்து மகாபூசையுங்கொடுத்து
தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து
இளநீருஞ்செங்கரும்பு யிதமானபால்பழமும்
வீதிக்குவீதி வேணமட்டும்பூசையிட
சந்துக்குச்சந்து தனிப்பூசைதானுமிட
எல்லோரறிய யெங்கும்பறையறைய
மதுரையிலுள்ளோர்கள் வகையுடனேதானுமப்போ
வீதிக்குவீதி வேணபடிபூசையிட்டார்
வீரனிடத்திற்கு வேந்தன்வந்தேதொழுது
முப்பழமுமிட்டு முன்பூசைபோடுகிறேன்
வந்தவினைகளெல்லாம் மாளவேசெய்யுமையா
என்றுசொல்லிநாய்க்கரும் யிதமாகக்கைதொழுது
ஆப[illegible]ாக இருக்குமந்தவேளையிலே
கோட்டைகுரி[illegible]முத்துநாய்க்கன்மேல்
ஆவேசம்வந்து அவன்பேரில்[illegible]த்து
திருவாய்மலர்ந்து செப்பலுற்றாரந்நேரம்
என்னைநினைக்காம லிதுவரையிலேயிருந்தீர்
பொந்திபசியாறிபூரித்தேனிப்போது
என்பெயரைச்சொல்லி யீந்தால்விபூதிதன்னை
வந்தபினிநோயும் மாணிடர்க்குத்தீருமப்பா
என்றுதெளிவா யிதமாகத்தான்சொல்லி
முன்னிருந்தசேனையெல்லாம முழுதுமெழுந்திருக்கச்
செய்துமலையேறி சென்றுதேயாவேசம்

திருமலைநாயக்கர் திருநீறுதான்கொண்டு
அரன்மனைக்குச்சென்று ஆயிழைக்குத்தான்கொடுத்து
ஆண்பிள்ளைபிறந்தால் ஆணிமுத்துவீரனென்று
இடவேணும்பேரென்று இயம்பினர் நாயக்கரும்
கும்பிட்டுவாங்கி குயில்மொழியாள் தான்றரித்தாள்
மூன்றுமாதஞ்சென்று முருக்கம்பூமேனியரும்
புத்திரனுமுண்டானாள் பொற்கொடியுமப்போது
பத்தானமாதத்தில்பாலனையும்பெற்றெடுத்தாள்
பிள்ளைக்குவீரன் பேர்வைத்து அந்நேரம்
ஐந்நூறுவண்டியில் ஆனதொருசர்க்கரையும்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
ஒன்பதுகாதவழி யூர்தோறுஞ்சர்க்கரைகள்
வீதிக்குவீதி வேணமட்டும்வழங்கிவர
வேதியர்க்கெல்லாம் வெகுவாய்தானங்கொடுத்தார்
சொக்கருடன்மீனாட்சி துலங்குமதிற்கோயில்சென்று
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
அறுபதுபொன்னெடுத்து அபிஷேகம்பண்ணிவைத்து
அரண்மனைக்குவந்து அரசன்திருமலையும்
வீரனுக்குப்பூசை விதமுடனேசெய்து
பூதலத்திலுள்ளவர்கள் பூசைகொடுப்பார்கள்
உன்காவல்உன்னடிமை வுண்மையுள்ளவீரயரே
தற்காத்துக்கொண்டு தயவாககாருமையா
ஐயாவேவீரனே அனைவரையுங்காத்திடுவாய்
அவரவர்பங்கில் அனுதினமும் நீயிருந்து
என்னையுங்காத்து இரட்சிக்கவேணுமையா
என்றுதிருமலையன் னின்புமுடனேதொழுது
வாழ்மதுரைசொக்கர் மதுரைமீனாட்சியம்மாள்
தங்கள்கிருபையினால் தாரணியோர்வாழ்ந்திருக்க
நாடுதழைக்கநல்லமழை தான்பொழிய

கதைமுற்றிற்று

---

வாழி

தேவர்களும்வாழி தேசத்தோர்கள்வாழி
அங்கயற்கண்மீனாட்சி அம்மையுந்தான்வாழி
பாடினோர்வாழி படித்தோருந்தான்வாழி
கேட்டோர்கிளைதழைத்துக் கீர்த்தியுடனேவாழி
மாடுகன்றுமக்கள் மருமக்கள்தான்வாழி
வீரனைப்பூசிக்கும் வேல்வீரர்தான்வாழி
இக்கதையையச்சி லியற்றுவோர்தான்வாழி
பூதலத்திலுள்ள புண்ணியர்கள்தான்வாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாலீஸ்வரனுர்

மதுரைவீரசுவாமிகதை.

முற்றிற்று.

உ

சிவமயம்.

# மதுரைவீரசுவாமிகதை.

## சரித்திர அலங்காரம்.

---

இம்மதுரைவிர அம்மானையைப் படித்தவர்களும் கேட்டவர்களும் சுக்கிரவாரந்தோறும் பூஜைசெய்பவர்களுக்கும் கலியாணங் கூடிவரும் உத்தியோகம்வரும் வியாதியால் மெலிகின்றவர்களுக்கு வியாதி நீங்கிவிடும் மனோகவலை நீங்கிவிடும் சகலபாக்கியமும் சந்தானசம்பத்தும் அஷ்டவ்ஸ்வரியமும் தனகனவஸ்துவும் தீர்க்காயுசும் புத்திர சம்பத்தும் மாடுகள் கன்றுகள் தழைத்து பயிர்களெல்லாம் நீட்சிமை யோங்கி எப்பொழுதும் இழிவில்லாப் பெருமை யுண்டாகும் இந்தப்படிக்குகாசிகாண்டத்தில் வியாசரால் சொல்லிய கவிகளிருந்ததை இக்கதைக்காக மொழிபெயர்த்தருளியது சுபம். சுபம்.

சரித்திர அலங்காரம்.

முற்றிற்று.

---

விடாத நகைப்பை விளைவிக்கும்.

# விநோதவிகட சிந்தாமணி

நண்பர்காள் இதுவரை விகடபுஸ்தகங்கள் அநேகம் பார்த்திருப்பீர்கள் ஆயினும் இதைப்போல் பூராவும் விகடமாக இராதென்பது திண்ணம்.

இதில் பாரதத்துக்குக்கிரதம் ராமாயணத்துக்குக் கிமாயணம் வெண்பாவுக்குக் கிண்பா வ்யாணத்துக்குக் கிண்ணம் என்பதைப்போன்ற ஒவ்வொன்றுக்கும் எகனைக்கு முகனையாக அநேகபாடல்களும் யுக்திசாதுர்ய வாக்யங்களுமாக ஆதிமுதல் அந்த வரை விகடப்ரஸங்கமாகவே அமைந்திருக்கும் விலை அணா 4.

## ஷை இரண்டாம்பாகம்.

இதில் விகடப் பிரசங்கத்துக்குரிய கதைகள் ஏராளமாக அடங்கியுள்ளது. 0 6 0

கோமாளிப்பாட்டு விகடமாகவேயிருக்கும். 0 0 6

கானமோகன டி ஏ| இராஜாமணிஅம்மாள் டி. ஜி. ஜெகநாதநாயுடு சாமிநாதமுதலியார், ஜெகன்மோகன குப்புசாமிமுதலியார், மனமோகன அரங்கசாமிநாயுடு முதலிய தற்காலத்திலுள்ள டிராமாக்கம்பெனியார் பலராலும் பாடிவருகிற பாடல்கள் பூராவும் அடங்கிய

அல்லியரசாணி சரித்திரம் நூதனமானது விலை அணா 2.

நல்லதங்காள் சரித்திரம் முதல்பாகம் படத்துடன் 2.

ஷை இரண்டாம்பாகம் படத்துடன் விலை அணா 2.

டி. எ. இராஜாமணிமோகினிராஜன் சரித்திரம் 1.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள்மீது

## நூதன இந்துஸ்தான் பஜனைக்கீர்த்தனை.

ம-ா-ா-ஸ்ரீ-கலியாணசுந்தரம்பிள்ளை அவர்களாலியற்றியது.

இதில் தற்காலம் வழங்கிவரும் இந்துஸ்தான் வர்ணமெட்டுகளில் பஜனைகளுக்குரிய பக்திரசமான கீர்த்தனைகளும் முக்கியமான பாடல்களும் பார்ஸ் இந்துஸதான் பாடல்களும் அநேகம் அடங்கியுள்ளது படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் ஆனந்தத்தையும் உற்சாகத்[illegible]ண்டுபண்ணும்

முதற்பாகம் இதன்விலை அணா 2.

ஷை இரண்டாம்[illegible] அணா 2.

இதில்கண்ட புஸ்தகங்களும் இதர புஸ்தகங்களும் நமது புஸ்தகசாலையில் சரசமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

எமது மேல்விலாசம்

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்

புக்ஷாப், புதுமண்டபம் மதுரை.

77071